# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 13 ஜூலை - 2000 இதழ் - 7



அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப் பண்ணும்,
உம்மை நம்பியிருக்கிறேன், நான் நடக்க வேண்டிய வழியை
எனக்குக் காண்பியும்...... சங்கீதம். 143:8

# அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை(112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு,உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தங்கள் அனுப்பப்படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ.20/-

*தொடர்பு முகவரி:*
*தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்*
*தபால் பெட்டி எண் 27,*
*காங்கயம்* - 638 701. இந்தியா

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்

## ஆசாரியின் அறிவுரையிலே...

| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 01 |
| 2. | கிறிஸ்துவின் நாமம் | 09 |
| 3. | கிறிஸ்துவின் மோசமான விரோதிகள் | 11 |
| 4. | பெண்கள் பகுதி | 13 |
| 5. | வாலிபர் பகுதி | 16 |
| 6. | எண்ணாகமம் ஒரு கண்ணோட்டம் | 19 |
| 7. | வெளிப்படுத்தின விசேஷம் | 21 |
| 8. | தெரிந்து கொள்ளுங்கள் | 27 |
| 9. | தீர்க்கதரிசிகள் | 30 |

# THIRUMARAI AASAAN

Published by Church of Christ

Editor
S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamil Nadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol .13 July - 2000 Issue - 7

*ஆசிரியவுரை*

# மேரோசின் பாவம்

ஆமோஸ் பற்றி ஓரளவு எங்களுக்குத் தெரியும். போவாஸ் பற்றியும் கொஞ்சம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், யார் இந்த மேரோஸ் என்று அப்படியே யோசிக்கிறீர்களா? யோசியுங்கள். கண்டிப்பாக நீங்கள் நினைப்பது போல, இந்த மேரோஸ் ஒரு பழைய ஏற்பாட்டுப் பாத்திரமல்ல. அப்படியானால், புதிய ஏற்பாட்டில் இப்படியொரு பெயரை நீங்கள் காட்ட முடியுமா என்று சவால் விடுகிறீர்களா? கொஞ்சம் பொறுங்கள். முதலாவது, மேரோஸ் என்பது ஒரு நபரின் பெயரே அல்ல. குழப்பம் இன்னும் அதிகமாகிறதா? என்ன செய்வது, நமது வேத அறிவு அப்படியிருக்கிறது. உங்கள் குழப்பம் தீர்ந்து, நீங்கள் தெளிவடைய இந்த மேரோஸ் விஷயத்தில் வாய்ப்பு கொஞ்சம் குறைவாக இருப்பதால், நானே சொல்லிவிடுகிறேன்.

மேரோஸ் என்பது இஸ்ரவேலிலே இருந்த ஒரு இடம் அல்லது ஊரின் பெயர். இந்த ஊர் அமைந்திருந்த இடம் ஓர் ஆற்றங்கரை. இது இஸ்ரவேலின் கோத்திரத்துக்குட்பட்ட பகுதியில் இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்த ஊரின் பெயர் ஒட்டுமொத்த வேதாகமத்திலும் ஒரே ஒரு இடத்தில் மட்டும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அந்த ஒரு இடத்திலும் மெச்சும்படியான அளவில் சொல்லப்படவில்லை. இதோ அந்த வசனம், "*மேரோசைச் சபியுங்கள், அதின் குடிகளைச் சபிக்கவே சபியுங்கள் என்று கர்த்தருடைய தூதனானவர் சொல்லுகிறார். அவர்கள் கர்த்தர் பட்சத்தில் துணை நிற்க வரவில்லை. பராக்கிரமசாலிகளுக்கு விரோதமாய் அவர்கள் கர்த்தர் பட்சத்தில் துணை நிற்க வரவில்லையே*" (நியாதி.5:23) "*அவர்கள் கர்த்தர் பட்சத்தில்*

*துணை நிற்க வரவில்லை"* என்ற பரிசுத்த ஆவியானவரின் குற்றச்சாட்டு, ஒரே வசனத்தில் இரண்டு முறை வெளிப்படுத்தப்பட்டிருப்பதால் மேரோசின் குடிகள், கர்த்தரின் பட்சத்தில் நிற்கும் வாய்ப்பு வந்தபோது, அதை உதாசீனம் செய்து, கர்த்தர் எரிச்சலடையும் ஒரு முடிவை எடுத்திருக்கிறார்கள் என்பது நன்றாகவே தெரிகிறது. அவர்களின் அந்த பாவச் செயலுக்குத் தண்டனையாகத் தான் மேற்கண்ட வசனம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், அவர்களின் பாவச் செயல்கள் என்னவென்று வேதாகமம் விபரமாகச் சொல்லாதபடியால், அவைகளை நாம் கண்டுபிடிப்பதற்கு, அந்த வசனத்தின் பின்னணியைத் தெரிந்து கொள்வது அவசியமாகிறது. ஆகவே, அத்திசையில் நமது கவனத்தை இப்பொழுது செலுத்துவோம்.

இஸ்ரவேலை கானான் தேசத்துக்குள் வெற்றியாக அழைத்துச் சென்ற மாபெரும் தலைவனாகிய யோசுவாவுக்குப் பின் ஜனங்களைவழிநடத்த சரியான தலைமை இல்லை. அவனவன் தன் தன் பார்வைக்குச் சரியானபடி செய்து வந்தான். இந்த இழிநிலை,முதல் ராஜாவாகிய சவுல் ஏற்படுத்தப்படும் வரை நீடித்தது. சுமார் 300 முதல் 350 ஆண்டுகளை உள்ளடக்கிய இக்கால கட்டத்தில் தேவன் இஸ்ரவேலை நியாயாதிபதிகளைக் கொண்டு வழிநடத்தினார். வேதாகம சரித்திர ஆசிரியர்கள் இக்காலகட்டத்தை இருண்டகாலம் என்றும் குறிப்பிடுவதுண்டு. ஏனெனில் இந்த நாட்களில் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, பாகால்களைச் சேவித்து, கர்த்தருக்கு கோபமூட்டி, கர்த்தரை விட்டு விலகிப்போனார்கள். *(நியா.2:11-13)* ஆகவே, தேவனும் அவர்களை விட்டு விலகினார்.

எப்பொழுதெல்லாம், கர்த்தர் இவர்களை விட்டு விலகினாரோ அப்பொழுதெல்லாம் சுற்றியிருந்த எதிரிகள் இவர்களை மேற்கொள்ளுவார்கள். அவர்களின் கோரப்பிடியில் சிக்கிச் சீரழிந்து, விடுபடும் வழிதெரியாமல் திணரும்போது. கொஞ்சம் புத்தி வரும். அப்பொழுது, "ஆ, எங்கள் கர்த்தாவே" என்று முறையிடுவார்கள். பரலோகத்தின் தேவனும்,முற்பிதாக்களுக்குக் கொடுத்த வாக்கினிமித்தமாக இவர்களுக்கு இரங்கி, இவர்களிலிருந்து ஒரு நியாயாதிபதியை எழும்பப்பண்ணி, எதிரிகளிடமிருந்து இவர்களை விடுவிப்பார். பிறகு, மீண்டும் பாவம், அப்புறம் எதிரிகள், பிறகு கூக்குரல் அப்புறம் இரட்சிப்பு என்று காரியங்கள் இப்படி சுழற்சியாக நடந்துவந்தது. இந்தச் சுழற்சிதான் ஒட்டுமொத்த நியாயாதிபதிகளின் புத்தகம். இஸ்ரவேல் ஜனங்கள் கொஞ்சமும் வெட்கமில்லாமல், இதே போன்று சுமார் 300 ஆண்டுகளைக் கழித்திருக்கிறார்கள் என்றால் அவர்களின் மனநிலை எப்படியிருந்திருக்குமென்று நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள்.

இப்படி இஸ்ரவேலை இரட்சிக்க தேவனால் எழுப்பப்பட்ட 15 நியாயாதிபதிகளில் இரண்டாவது நியாயாதிபதியான ஏகூத் மரணமடைந்தபின், இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப்

பொல்லாப்பானதைச் செய்தபடியால், கர்த்தர் அவர்களை,யாபீன் என்னும் கானானியரின் ராஜாவின் கைகளில் விற்றுப்போட்டார்(*4:1,2*). அவனுக்கு தொளாயிரம் இருப்பு இரதங்களும், போர்முறை தெரிந்த தளபதியாகிய சிசெராவும் இருந்தார்கள்.இந்த யாபீன் இஸ்ரவேலை 20 ஆண்டுகள் கொடுமையாக ஒடுக்கினபடியால் (*4:3*)ஜனங்கள் வழக்கம் போல கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள். தேவனும், தம்முடைய நீதியின்படியாக அவர்களுக்கு இரங்கினார்.

இச்சமயத்தில் தான், தெபொராள் என்னும் பெண் தீர்க்கதரிசியை தேவன் எழும்பப் பண்ணி, அவளுக்குத் துணையாக, அபினோகாமின் குமாரனாகிய பாராக்கையும் ஏற்படுத்தினார். இவர்கள் பலம்வாய்ந்த யாபீன் படையை பட்டயக்கருக்கினால் கலங்கடித்தார்கள். பராக்கிரமசாலியான சிசெரா, யாகேல் என்னும் ஒரு பெண்ணின் கையில் விழுந்து செத்தான். கர்த்தரின் துணையோடு அவர்கள் கானானின் ராஜாவாகிய யாபீனை முற்றிலும் நிர்மூலமாக்கினார்கள் (*4:14-24*).

இப்படி, கர்த்தர் தங்களுக்குக் கொடுத்த வெற்றியைக் கொண்டாடி, நியாயாதிபதியாகிய தெபொராளும், யுத்தத்திற்குத் தலைமை தாங்கின பாராக்கும், தேவனைத் துதித்து வெற்றிக்களிப்புப் பாடல் ஒன்றைப் பாடினார்கள். இப்பாடலின், ஊடே வரும் ஒரு வசனம் தான், ***மேரோசைச் சபியுங்கள்*** என்பது. பரிசுத்த வேத எழுத்துக்கள், மேரோசின் புத்திரர் அந்நாளில் மேற்கொண்ட நிலையையும்,எடுத்த முடிவையும் கடுமையான வார்த்தைகளால் கண்டனம் செய்வதால், அவர்கள் எப்படிப்பட்ட தவறைச் செய்திருக்கக் கூடுமென்று, நாம் சற்று உற்றுநோக்கி, அவைகளிலிருந்து, நமக்காகச் சில பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியுமா என்று முயற்சிப்போம்.

## I. மேரோசின், செய்ய வேண்டியதைச் செய்யாத பாவம்

முதலாவதாக, மேரோசின் புத்திரர் தாங்கள் செய்யவேண்டியதைச் செய்யவில்லை என்று நாம் கூறமுடியும். ஏனெனில், இவர்கள் பராக்கிரம சாலிகளுக்கு எதிரான யுத்தத்தில் பங்குபெறவில்லையென்று வசனம் (*நியா.5:23*) குற்றம் சாட்டுகிறது.

ஒருவேளை, யுத்தத்தில் ஒரு ஊரார் பங்குபெறவில்லை யென்பது அவ்வளவு பெரிய குற்றமா? அல்லது அப்படியே குற்றமாக இருந்தாலும், அதற்காக தேவன் இவர்களை இப்படிச் சபிப்பது நியாயமாகுமா என்று நீங்கள் கேட்கக்கூடும். புறக்கண்களால் பார்க்கும்போது எனக்கும்கூட அப்படித்தான் தோன்றுகிறது. ஆனால், நம்முடைய தேவன் நீதியுள்ளவரா யிருக்கிறபடியால் (*2.தீமோ.4:8*), சரியான காரணமும், காரியமும் இல்லாமல் அப்படி சபித்திருக்கமாட்டார் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. ஒரு சமயம் இயேசு ஆண்டவர் அத்திமரத்தைச் சபித்தார் (மத்.21:19). மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது அதுகூட நமக்குத் தவறாகவே தெரிகிறது. ஆனால், அதன் பின்னணியை அலசி ஆராய்ந்து பார்த்தால்,

உண்மை விளங்குகிறது. ஆகையால், கர்த்தரின் இந்த சாபத்திலும் தேவநீதி இருக்கவே செய்யும்.

அந்நாளில் யுத்தம் நடந்த பகுதி தாபோர் மலை *(4:14)*. இந்த மேரோசோ இந்த மலைக்கு அருகாமையில் இருந்த ஊர் என்று சொல்லப்படுகிறது. நடந்த யுத்தமோ, இஸ்ரவேலுக்காக கர்த்தரால் நடத்தப்பட்ட யுத்தம் ஒட்டுமொத்த இஸ்ரவேலுக்கும் பொதுவான யுத்தம். இந்த யுத்தத்திலே கலந்து கொள்வதற்கு வெகு தூரத்திலிருந்தெல்லாம் ஜனங்கள் ஆயிரக்கணக்கில் வந்திருந்தனர்*(4:14)*. ஆனால், யுத்தகளத்தை ஒட்டியிருந்த மேரோசின் குடிகளோ, கர்த்தரின் யுத்தத்தைப் புறக்கணித்து ஒதுங்கிக் கொண்டார்கள். கர்த்தரின் பட்சத்தில் நிற்கும் வாய்ப்பு, வீடுதேடி, வாசல்வரை வந்தும் அதை அவர்கள் பயன்படுத்தவுமில்லை, தங்கள் பங்கைச் செலுத்தவுமில்லை. ஆகவேதான், ***கர்த்தர் பட்சத்தில் துணை நிற்க வரவில்லை*** என்று வேதாகமம் குற்றமாக கூறுகிறது.

இவர்கள் துணைக்கு வரவில்லையென்றால் கர்த்தர் தனது யுத்தத்திலே தோற்றுவிடுவாரா, என்ன? இல்லை இல்லவே இல்லை. ஆனாலும், கர்த்தருக்காகப் பாடுபடும் வாய்ப்புக் கிடைக்கும் போது, நாம் அதைத் தவறாமல் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஒரு சமயம், மொர்தெகாய், எஸ்தர் ராணியிடம், இதே கருத்தை வலியுறுத்தித்தான் எச்சரிப்பு கொடுத்தான். ***நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும். அப்பொழுது, நீயும் உன் குடும்பத்தாரும் அழிவீர்கள். நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத்தெரியும்*** என்று சொல்லச் சொன்னான் (எஸ்.4:14). புதிய ஏற்பாட்டில் யாக்கோபு ஆசிரியர் இன்னும் ஒருபடி மேலே சென்று மேரோசின் செயலைப் பாவமென்று கூறுகிறார். ***ஆதலல், ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்*** (யாக்.4:17) என்று.ஆகவே, மேரோசின் புத்திரர் தாங்கள் செய்யவேண்டியதை செய்யாமல் பாவம் செய்திருக்கிறார்கள். தேவனும் அவர்கள் பாவத்தினிமித்தம் அவர்களைத் தண்டித்திருக்கிறார்.

கர்த்தருக்குள் எனக்கருமையானவர்களே, கர்த்தருக்கடுத்த காரியத்தில் நாம் இந்த மேரோசின் புத்திரரைப் போல இருக்கிறோமா? சிந்திப்போம். ஒரு சமயம், மோசே மலையிலிருந்து இறங்கிவரத் தாமதமானபோது, ஜனங்கள் ஆரோனின் துணையோடு பொன் கன்றுக்குட்டியைச் செய்தார்கள். அதைக்கண்ணுற்ற மோசே, எரிச்சல் மூண்டு, சகோதரனாகிய ஆரோனை ஒரு பிடிபிடித்துவிட்டு, பாளயத்தின் வாசலிலே நின்று, ***கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? அவர்கள் என்னிடத்தில் சேரக்கடவர்கள் என்றான். அப்பொழுது, லேவியின் புத்திரர் எல்லோரும் அவனிடத்தில் கூடிவந்தார்கள்*** *(யாத்.32-26)* என்று பார்க்கிறோம்.

ஆகையால், கர்த்தரை நம்பி, அவருக்கு ஒப்புக்கொடுத்திருக்கிற பிள்ளைகளாகிய நாம், எப்பொழுதும் கர்த்தரின் பட்சத்தில் நிற்கிறவர்களாகவும், பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொள்ளுகிறவர்களாகவும் இருக்கவேண்டும் (எபே.6:11). இந்த விஷயத்தில் நாம் மேரோசின் புத்திரரைப் போல நடந்து தேவனுடை கோபத்திற்கும், சாபத்திற்கும் ஆளாகாமல், லேவியின் புத்திரரைப்போல நடந்து கொள்வது அவசியம்.

## II.மேரோசின் அனலும், குளிருமற்ற பாவம்

இரண்டாவதாக, மேரோசின் அனலும், குளிருமற்ற தன்மையை நாம் குறிப்பிட முடியும். ஏனெனில்,வேதாகமம் இவர்கள், கர்த்தரின் பட்சத்தில் நிற்கவில்லையென்று குற்றம் சாட்டினாலும் இவர்கள் கர்த்தருக்கு எதிராக யுத்தம் செய்தார்களென்று சொல்லுவதில்லை. ஆயினும், தேவன் இவர்களைக் குற்றவாளிகளாகவே தீர்த்து, தண்டித்திருக்கிறார்.

வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள லவோதிக்கேயருக்கு எழுதப்பட்ட நிருபத்தில், இப்படிப்பட்ட தன்மை தேவனால் வெகுவாகக் கண்டிக்கப்பட்டுள்ளது. ***உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால், உன்னை என் வாயினின்று வாந்தி பண்ணிப்போடுவேன்.*** (வெளி.3:15,16). இந்த லவோதிக்கேயர்களின் பாவம் போன்றதுதான் மேரோசின் பாவமும். அவர்கள் தண்டிக்கப்பட்டதற்கு இதுவும் ஒரு காரணம்.

இன்றைக்கு, தேவனுடைய பிள்ளைகளென்று சொல்லிக்கொள்கிற அநேகர், நான் தேவனுக்காக எதுவும் செய்யாவிட்டாலும், தேவனுக்கு விரோதமாக நான் எதுவும் செய்யவில்லையென்று சுயதிருப்தி பட்டுக்கொள்கின்றனர். ஆனால், இயேசுகிறிஸ்து அப்படிப்பட்ட நினைப்புக்கு சாட்டையடி கொடுக்கிறதைக் கவனியுங்கள். ***என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான் ...*** (மத்.12:30) என்று. ஆகவே, கர்த்தருடைய காரியத்தில் நாட்டமற்றவர்கள், அவருடைய பிள்ளைகள் என்று சொல்லிக்கொள்ளும் தகுதியை இழந்துவிடுவதோடு, அவருக்கு எதிரானவர்கள் என்ற நிலையையும் பெற்றுவிடுகிறார்கள்.

ஆகவே, தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் நமது எண்ணத்திலும், செயலிலும், எடுக்கும் முடிவிலும் தெளிவுள்ளவர்களாகவே எப்பொழுதும் இருக்கவேண்டும். தேவன் அதை நம்மிடம் எதிர்பார்க்கிறார். யோசுவா, ஒரு சமயம் ஜனங்களைப்பார்த்து, ***....நீங்கள் யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள்....என்றான்*** (யோசுவா 24:15) வேறொரு சமயத்தில் எலியா தீர்க்கன் ஜனங்களைப் பார்த்து, ***நீங்கள் எந்த மட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றான்....*** (இராஜ.18:21) எலியா அப்படிச் சொன்னபோது ஜனங்கள் பிரதியுத்திரமாக ஒன்றும் சொல்லவில்லை என்று வசனம் கூறுகிறது.

அதற்குக்காரணம் என்ன? அவர்களால் முடிவெடுக்க முடியவில்லை. ஏன் முடிவெடுக்க முடியவில்லை? கர்த்தர் உண்மையான தெய்வமா அல்லது பாகால் உண்மையான தெய்வமா என்று விளங்கவில்லை. ஏன் விளங்கவில்லை? வேத வசனங்களைவிட்டு வெகுதூரம் வந்துவிட்டார்கள். ஆம், தேவனுடைய வார்த்தைகளை மறந்தது அவர்களை அனலும், குளிருமற்ற நிலைக்குத் தள்ளிச் சென்றது. இதே நிலைதான் இன்றைக்கும் காணப்படுகிறது. பக்தி விஷயத்தில் அனலும், குளிருமற்ற தன்மை கிறிஸ்தவத்தை ஆக்கிரமித்துள்ளது. இதனால், கிறிஸ்தவர்களென்று சொல்லிக் கொண்டிருக்கிற அநேகர், கிறிஸ்துவுக்கு எதிரான இடத்தில் இருக்கிறார்கள். கிறிஸ்துவுக்கும், மெய்க்கிறிஸ்தவத்திற்கும் எதிரான இடத்தில் இருப்பது தண்டனைக்கு ஏதுவானதென்பது, மேரோசின் காரியத்தில் நமக்கு நன்றாக விளங்கிவிட்டது.

ஆகவே, நாம் தேவ கோபத்திலிருந்து தப்பித்துக்கொள்ள, நடுநிலைவகிக்காமல், கர்த்தரின் பட்சத்தில் நிற்போம். அப்படிக் கர்த்தரின் பட்சத்தில் நிற்பதற்கு வேத அறிவு அவசியமிருக்கிறபடியால், வேத வசனங்களை ஜாக்கிரதையாகப் படிப்போம். அதன்படி, அப்போஸ்தலன் பவுல் சொல்லுகிறது போல, ***வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரிக்கிற*** (கொலோ.*3:17*)மக்களாக இருப்போம்.

## III. மேரோசின் வாய்ப்பை நழுவ விட்டபாவம்

மூன்றாவதாக, மேரோசின் புத்திரர், தங்களுக்குக் கிடைத்த வாய்ப்பை நழுவ விட்டு விட்டார்கள் என்று நாம் சொல்லமுடியும். அவர்கள் கர்த்தருக்கான யுத்தத்தில் பங்கு பெறும்படியான வாய்ப்பு கொடுக்கப்பட்டது. ஆனால், அதை அவர்கள் பயன்படுத்தவில்லை.ஆம், கர்த்தருக்காக யுத்தம் செய்வதற்கு அவர்கள் நாள் கணக்கிலும், மைல் கணக்கிலும் நடக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அவர்கள் இருக்கும் இடத்திலேயே, பரலோகத்தின் தேவனுக்காக யுத்தம்செய்யும் வாய்ப்பு- தங்கள் தேசத்திற்காக யுத்தம் செய்யும் வாய்ப்பு- தங்களுக்காகவும், தங்கள் பிள்ளைகளுக்காகவும் யுத்தம் செய்யும் வாய்ப்பு வலிய வந்து சேர்ந்தது. ஆனாலும், அவர்கள் அதைப் பயன்படுத்தவில்லை.

லூக்கா எழுதின நற்செய்தி நூலில் இயேசு ஆண்டவரை, விசாரிக்கும் வாய்ப்பைப் பெற்ற பிலாத்து, இயேசுவை விடுவிக்கும் மனதுடையவனாய் இருந்தும் (லூக்.*23:20*), அவரை விடுவிக்கவில்லை என்று வேதத்திலே வாசிக்கிறோம். விடுவிக்கும் வாய்ப்பு கிடைத்தும் அவன் அதைப் பயன்படுத்தாததை வேதாகமம், குற்றமாகவே கூறுகிறது. வேதாகமத்தை நேசித்து வாசிப்பவர்களும் அவன் பற்றி படிக்கும்போது முகம் சுளிக்கவே செய்கின்றனர். காரணம் என்ன? அவன் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி நீதிமானை விடுவித்திருக்க வேண்டுமென்பது தானே.

இன்னும் நாம் வேதாகமத்தை வாசிக்கும் போது, பலர் தங்களுக்குக் கிடைத்த அரிய வாய்ப்புகளைத் தங்களுடைய வாழ்க்கையில் பயன்படுத்தாமல், தேவனிடத்திலிருந்து தண்டனையைப் பெற்றும் தேவனுடைய தண்டனைக்காக காத்தும் இருக்கிறார்களென்பதை அறிந்து கொள்ள முடியும். உதாரணமாக, பவுலை விசாரித்த, அகிரிப்பா இராஜா ஒரு சந்தர்ப்பத்தில், பவுலை நோக்கி ***நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய். என்றான்*** (அப்.26:28) இங்கே, ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தைகளைக்கேட்டு, அதனடிப்படையில் கிறிஸ்தவனாகி, தேவனுடைய நித்திய தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ளும்படியான வாய்ப்பு இவனுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால், அந்த ராஜா அதை பயன்படுத்தவில்லை. அவனுக்காக, தண்டனை காத்துக் கொண்டிருக்கிறது.

இன்னும், ஆளுநர் பேலிக்ஸ்-யிடம், வேறொரு சந்தர்ப்பத்தில், அப்போஸ்தலன் பவுல், ***நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில்,பேலிக்ஸ் பயமடைந்து, இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன் என்றான்.*** (அப்.24:25) இவனுக்கு சமயம் கிடைத்து, மீண்டும் பவுலை அழைத்தான் என்று வேதாகமம் எங்கும் காணோம். ஆக, இவனும் தனக்குக்கிடைத்த வாய்ப்பை நழுவவிட்டு, நித்திய ஆக்கினைக்காக காத்துக் கொண்டுள்ளான் என்று தெரிகிறது.

அன்பானவர்களே, நமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்து, மனந்திரும்பும்படியான அழைப்பை எல்லோருக்குமே கொடுத்துள்ளார். ***வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்*** என்று கூவி அழைக்கிறார். *(மத்.11:28)* இன்னும், புகழ்பெற்ற மார்ஸ் மேடைப்பிரசங்கத்தில் ***அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்*** (அப்.17:30) என்று பவுல் கூறுகிறார். மேலும், வெளிப்படுத்தின விசேஷத்தில்,***இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு , கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடு போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்.*** (வெளி.3:20) என்றுள்ளது.

மேற்கண்ட வசனங்களெல்லாம், தேவன் மனிதர்களுக்குக் கொடுக்கும் வாய்ப்புகளைப் பற்றிப் பேசுகிறது. இந்த வாய்ப்புகளை, மனிதர் எல்லோரும் பயன்படுத்த வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். ஆகவே தான், மார்ஸ் மேடைப்பிரசங்கத்தில், ***மனந்திரும்புவது தேவகட்டளை*** என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்பூமியின் வாழ்க்கையில் ஒருவன், இவ்வாய்ப்பை நழுவவிட்டால், மீண்டும் அவனுக்கு வாய்ப்பே இல்லையென்பதை, ***லாசரு ஐசுவரியவான்*** உவமையின் மூலம் நமக்குத் தெளிவாக்கப்பட்டுள்ளது. *(லூக்.15:19-31)*.

ஆகையால், அருமையானவர்களே நாம் எப்படிப்பட்ட மக்களாக உள்ளோம்? இப்பூமியின் வாழ்க்கையில், கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கும் வாய்ப்பை முறையாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளோமா? அல்லது மேரோசின் மக்களைப்போல வாய்ப்பை நழுவவிட்டுவிட்டு, தேவ கோபத்திற்கு நம்மை ஆயத்தமாக்கிக் கொண்டுள்ளோமா? என்ன செய்து öPõs kÖ÷Î õ®? *ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்கும்* என்று (எபி.10:31) எபிரேய ஆசிரியர் சொல்லுகிறபடியால், தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளின்படி செய்வோமாக! (பிர.12:13). அப்படி பயந்து வாழ்ந்தால்தான், பரலோக பாக்கியத்திற்கு பங்குள்ளவர்களாக மாறமுடியும். அப்பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ள நாம் யாவரும் முயற்சிப்போமாக!

செ. ராஜநாயகம்

# டெல் - எல் - அமர்னா

1. 1887-ல் டெல்-எல்-அமர்னா என்கிற இடத்தில் எதிர்பாராதவிதமாக தோண்டி எடுக்கப்பட்ட ஒரு கண்டுபிடிப்பு, பண்டைய எகிப்தின் தொடர்பு சாதனங்களை முழுமையாக அறிந்துகொள்ள வழிவகுத்தது. அந்த சாதனங்கள் களிமண்ணிலான பலகைகளில் பாபிலோனிய மொழியில் எழுதப்பட்டிருந்தது, எகிப்தின் பதினெட்டாவது ராஜவம்சத்தில் இம்மொழி உலகெங்கும் கடிதப் போக்குவரத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக இருந்தது.

2. அமர்னாவில், எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகி மோசேயால் வழிநடத்தப்பட்டு வெளியேறிய எபிரேயர்களாகிய இஸ்ரவேல் மக்கள் கானான் தேசத்தைச் சுதந்தரித்தது பற்றி அந்த களிமண் பலகைகளில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

3. அக்காலத்தில் வாழ்ந்த பாலஸ்தீன பிரபுக்கள், இஸ்ரவேலரின் படையெடுப்பை சமாளிக்க முடியாமல், எகிப்திய ராஜாக்களோடு உதவிக்காக ஏறக்குறைய 300 முறை தொடர்பு கொண்டனர் என்பதும் இதன் மூலம் தெரியவந்துள்ளது.

ஆ, தேவனுடைய வார்த்தைகள் எவ்வளவு உண்மையாய் இருக்கிறது!

# கிறிஸ்துவின் நாமம்

புதிய ஏற்பாட்டை ஒருவர் வாசிக்கும்போது கிறிஸ்துவின் நாமம் அநேக முறை பயன்படுத்தப்பட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட வேண்டும். மனிதன், பெயர் (நாமம்) முக்கியமல்லவென்றும், பெயரிலே ஒன்றுமில்லை என்றும் அடிக்கடி வாதிடுகிறான். இது ஒருவேளை மற்ற பெயர்களிலே உண்மையாயிருக்க லாம். ஆனால் நிச்சயமாக கிறிஸ்துவின் நாமத்திலே (பெயரிலே) அப்படியல்ல, கீழ்வருவனவற்றைக் கவனிக்கவும்.

1. தேவனுடைய மக்கள் புதிய நாமத்தினாலே அழைக்கப் பட்டார்கள் *(ஏசாயா 62:2)* புதிய ஏற்பாட்டிற்கு திருப்புவோமாகில், சபை கிறிஸ்துவின் நாமத்தை (பெயரை) தரித்துக் கொள்கிறது. *(ரோமர் 16:16) 1கொரி.12:13* தனிப்பட்ட ஒவ்வொரு அங்கத்தினரும் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப் பட்டனர்*(அப்.11:26)*. இதுவே அந்த புதிய நாமம்.

2. குடும்பம் கிறிஸ்துவின் பெயரால் அழைக்கப்பட்டிருக்கிறது. இப்படியாகத்தான் பவுலும் எபேசியர் *3:14-19*-ல் குறிப்பிடுகிறார். இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலும் முழுக் குடும்பத்துக்கும் நாமகாரணராகிய நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால் படியிட்டு.... வேண்டிக் கொள்கிறேன்.

3. சபை கிறிஸ்துவின் மணவாட்டி என்று அழைக்கப்படுகிறது. ஆகையால் மணவாட்டி அவருடைய பெயரைத் தரித்துக் கொள்ள வேண்டும் *(வெளி.21:9;22:17)* கிறிஸ்துவுக்கு ஒரே ஒரு மணவாட்டி மட்டுமே உண்டு, எனவே அவர் வரும்போது தம் பெயரைத் தரித்துக் கொண்டுள்ள மணவாளியை (சபையை) மட்டுமே தம்மிடமாய் சேர்த்துக்கொள்வார் *(எபே.5:27)*.

4. அவருடைய நாமம் எல்லா நாமங்களுக்கும் மேலாக உயர்த்தப்பட்ட நாமம் ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர்,பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும் படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். *(பிலி.2:9-11)*.

5. இரட்சிப்பு கிறிஸ்துவின் நாமத்திலே அருளப்படுகிறது. அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷருக்குள்ளே வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை.(அப்.4:12).

6. கிறிஸ்துவின் நாமத்திலே விசுவாசம்: உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவ குமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாச மாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்.

7. கிறிஸ்துவின் நாமத்திலே அறிக்கையிடுதல் ..... கிறிஸ்துவின் நாமத்தை தொழுது கொள்ளுகிற எவனும் அநியாயத்தை விட்டு விலகக்கடவன் (2.தீமோ.2:19).

8. மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே ஞானஸ்நானம்: பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். (அப்.2:38).

9. கர்த்தருடைய நாமத்திலே கூடிவருதல்: கிறிஸ்து சொன்னார் ஏனென்றால் இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடிவருகிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்.(மத்.18:20).

10. எல்லாவற்றையும் கர்த்தருடைய நாமத்திலே நடப்பிக்க வேண்டும்: வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்.(கொலே.3:17).

11. கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நீதிமான்கள் பகைக்கப்படுவார்கள். என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள் முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான். (மத்.10:22)

12. கிறிஸ்துவின் நாமத்திலே ஜெபித்தல்; நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன்.(யோவான் 14:13).

13. கிறிஸ்துவின் நாமத்திலே பாவமன்னிப்புக் கிடைக்கும்: பிள்ளைகளே, அவருடைய நாமத்தினிமித்தம் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன்.(1யோவான் 2:12)

**14.** கிறிஸ்துவின் நாமத்தை தூஷிக்கலாகாது, உங்களுக்கு அளிக்கப்பட்ட நல்நாமத்தை அவர்களல்லவோ தூஷிக்கிறார்கள்.(யாக்.2:7)

**15.** கிறிஸ்துவின் நாமத்திலே பிரயாசப்படுதல், நீ சகித்துக் கொண்டிருக்கிறதையும், பொறுமையாயிருக்கிறதையும், என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன்.(வெளி.2:3).

**16.** கிறிஸ்துவின் நாமத்திலே ஜீவன் உண்டு: நீங்கள் இயேசுவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது. (யோவான் 20:30,31).

கிறிஸ்துவின் நாமம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்று நிச்சயமாகவே இப்பொழுது நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். இது உண்மையானால், சபையாகவும், தனி நபர்களாகவும், கர்த்தருடைய நாமத்தைத் தரித்துக் கொள்வது எவ்வளவு அவசியமானது என்பதை உங்களால் இப்பொழுது காண இயலும். நான் கிறிஸ்துவின் சபை அங்கத்தினர். ஆகையால், நான் கிறிஸ்தவன் எனும் பெயரில் மட்டுமே அழைக்கப்படுகிறேன். உங்களைப்பற்றி என்ன? நீங்கள் வேதத்தில் வாசிக்கப்படுகிற சபை அங்கத்தினரா? நீங்கள் மேற்கண்ட வசனங்களின் படியான கிறிஸ்தவரா? அப்படியிராவிட்டால் இன்றே அப்படியாகுங்கள்.

**J.C. சோட்** J.C.CHOATE

---

## கிறிஸ்துவின் மோசமான விரோதிகள்

தங்களை விசுவாசிகள் என்று சொல்லிக்கொண்டு, நடைமுறையில் அவிசுவாசிகளாய் இருக்கிறவர்களே கிறிஸ்துவின் மோசமான விரோதிகள். இவர்கள் வேத புத்தகத்தை விமர்சிப்பதற்காக கற்பதிலோ அல்லது இந்த பரிசுத்த புத்தகத்திலுள்ளவைகளை நிரந்தரமாக தவிர்ப்பதிலோ அல்லது மாற்றி எழுதுவதிலோ அல்லது முரண்படுவதிலோ தங்கள் வாழ்க்கையை செலவழிக்கிறார்கள். இந்த புத்தகம் அந்தக் காலத்தைச் சேர்ந்த மனிதர்களாலேயோ, அல்லது சீஷர்களர்லேயோ எழுதப்பட்டது என்பதும், தேவனாலே ஏவப்பட்டு எழுதப்பட்ட வசனங்கள் அல்ல என்பதும் அவர்களுடைய எண்ணமாயிருக்கிறது. வேதாகமத்தை, வரலாற்று வல்லுநர்களாகிய

மனிதர்களே உண்டாக்கினார்கள் என்றும் இந்த அவிசுவாசிகள் கருதுகிறார்கள். அந்தநூலில் சொல்லப்பட்ட நிகழ்வுகள் நடந்தேறி வெகுகாலத்திற்குப்பின் தான் அந்நூல் எழுதப்பட்டதென்று அதின் காலத்தை நிர்ணயிக்கிறார்கள் இந்த ***அறிஞர்கள்*** , "சுவிசேஷத்தின் எழுத்தாளர்கள் தங்களுக்குள் பரஸ்பரம் கருத்துகளை மாற்றிக் கொண்டார்கள், மேலும் அவர்களுடைய ஞாபகத்தில் இருப்பதை மாத்திரம் அப்படியே எழுதினார்கள்" என்றும், "இந்த சம்பவத்தில் உண்மையில் இது தான் நடந்திருக்கக் கூடும்" என்றும் சொல்லுகிறார்கள். இவ்வாறு மிகத்துணிகரமான வாக்கியங்களால் அதிதந்திரமாய் வேத புத்தகத்தின் நேர்த்தியிலும், அதிகாரத்திலும் மற்றவர்களுக்குள்ள நம்பிக்கையை பலவீனப்படுத்துகிறார்கள்.

இந்த சுயாதீன அறிஞர்கள் வேதாகமம், அது எழுதப்பட்ட காலத்தின் படைப்பே தவிர, சகல மனிதருக்கும் என்னெற்றைக்கும் கொடுக்கப்பட்ட தேவ செய்தியல்ல என்று முடிவுசெய்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவையும் அவருடைய போதனைகளையும் பல பகுதிகளாக பிரித்து, அதன் உபயோகம் அந்த கலாச்சாரத்தையுடைய மக்களாகிய முதல் நூற்றாண்டுக்கு மாத்திரம் பொருந்தும் என்கிறார்கள். இன்றைய உலகில் வாழும் நாம், அவருடைய எழுத்துக்களை ஆராய்ச்சி செய்து அதில் நமக்கு உபயோகப்படுபவைகளை மாத்திரம் எடுத்துக் கொள்ளச் சுதந்திரமுடையவர்களாய் இருக்கிறோம் என்கிறார்கள். ஆனால் அவர்கள் இப்புத்தகத்தை சகல மனிதரையும் கட்டுப்படுத்தும் ஒரு சட்டமாக பாவிக்கவில்லை.

இப்படிப்பட்டவர்கள் பல இறையியல் கல்லூரிகளில் ஆசிரியர்களாக இருக்கின்றனர். ஆதலால், விசுவாச உலகம் என்று சொல்லப்படும் அந்த கூட்டத்தில், அதிகரித்துக்கொண்டே போகும் மாணவர்களாக உள்ள இந்த குருக்களும், போதகர்களும், தலைவர்களும் கூட, வேதாகமத்தை ஒரு சரித்திர விளக்கவுரையாகவே காண்கிறார்கள் என்பதில் ஆச்சரியமேதுமில்லை. மேலும் பொதுவாக மத உலகில் தெய்வ நம்பிக்கை நசிந்து வருவதிலும் ஐயமேதுமில்லை.

எனவே *கிறிஸ்து திரும்ப வரும்பொழுது, இந்த பூமியில் விசுவாசத்தைக் . காண்பாரோ?* என்பது மிகச் சரியானதொரு கேள்விதான்.

பெட்டி சோட் **BETTY CHOATE**

பெண்கள் பகுதி

# அற்பமாய் எண்ணப்பட்டவள்

தேவனுடைய சிருஷ்டிப்பில், உயிருள்ளவைகளில் விலங்கு இனத்திலாகட்டும், மனித இனத்திலாகட்டும் எல்லாம் ஒரே மாதிரியாக இல்லை.தோற்றத்தில் ஒருவேளை சில உயரினங்கள் ஒத்திருந்த போதிலும் பண்புகளில் மாறுபட்டு காணப்படுகின்றன. சில உயிர்கள் சரீர அவயவங்களில் குறைபாடுகளுடன் படைக்கப்பட்டு விடுகின்றன. ஏன் இந்த வேறுபாடு என்று நாம் நம் சிருஷ்டிகரைப் பார்த்து கேள்வி கேட்க இயலாது. அவரால் வனையப்பட்ட பாத்திரங்களாக நாம் இருப்பதால் அவரது சித்தத்திற்கு ஒப்புக் கொடுப்பதைத் தவிர தேவனைப் பார்த்து கேள்வி கேட்பதற்கு நாம் தகுதியானவர்கள் அல்ல.

ஞானி சாலமோன் அற்பமான ஜெந்துவாகிய எறும்பைப் பற்றி கூறும்போது, *பூமியிலே சிறியவைகளாயிருந்தும், மகா ஞானமுள்ளவைகள் நான்குண்டு. அவையாவன. அற்பமான ஜெந்துவாயிருந்தும், கோடைக்காலத்திலே தங்கள் ஆகாரத்தைச் சம்பாதிக்கிற எறும்பும்* என்று (நீதி.30:24,25) கூறுகிறான்.எறும்பு அற்பமாய் எண்ணப்பட்டாலும் ஞானமுள்ளதாகயிருக்கிறது. நாம் இங்கு பார்க்கப்போகும் அற்பமாய் எண்ணப்பட்ட ஒரு பெண் ஆதியாகமத்தில் இருக்கிறாள். *லேயாள் அற்பமாய் எண்ணப்பட்டாள் என்று கர்த்தர் கண்டு, அவள் கர்ப்பம் தரிக்கும்படி செய்தார்.* (ஆதி.29:31).

இந்த லேயாள் முற்பிதாக்களில் ஒருவரான யாக்கோபின் தாய் மாமனாகிய லாபான் என்பவனின் மூத்த குமாரத்தி. யாக்கோபு தன் தாயாகிய ரெபேக்காளின் தவறான ஆலோசனையால் வயது சென்ற தன் தகப்பன் ஈசாக்கை ஏமாற்றி ஆசீர்வாதத்தை வாங்கிக் கொண்டு தன் அண்ணன் ஏசாவுக்கு பயந்து தன் மாமன் வீட்டிற்கு ஓடிப்போகிறான். லாபானுக்கு இரண்டு குமாரத்திகள் இருந்தார்கள். மூத்தவள் லேயாள், இளையவள் ராகேல். இந்த லேயாளுடைய கண் கூச்சப்பார்வையுடையதாயிருந்தது.

யாக்கோபு ராகேலை விரும்பி அவளை திருமணம் செய்ய ஏற்பாடுகள் செய்தான். ஆனால் லாபானோ அவனை ஏமாற்றி ராகேலுக்குப் பதிலாக லேயாளை அவனுக்குக் கொடுத்தான். காலையிலே அவள் லேயாள் என்று கண்ட யாக்கோபு லாபானிடத்தில் முறையிட்டான். அதன்பிறகு ராகேலையும் அவனுக்கு மனைவியாகக் கொடுத்தான். லேயாளைப் பார்க்கிலும் ராகேலை அவன் அதிகமாக நேசித்தான். ஆகவே,லேயாளை

அவள் அற்பாக எண்ணினாள். அவளுக்கிருந்த அந்தக் கூச்சப்பார்வையால் யாக்கோபு அவளை பூரணமாய் நேசிக்க இயலவில்லை. இந்த நிலையில்தான் கர்த்தர் அவளைக் காண்கிறார். கர்த்தருடைய பார்வை அவள் மேல்பட்டவுடன் அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று கர்த்தர் என் சிறுமையைப் பார்த்தருளினார் என்கிறாள்.

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரியே, நாமும் கூட அநேக சமயங்களில் அற்பமாய் எண்ணப்படுகிறோம். ஒரு வேளை நாம், நம் குடும்பத்தில், உறவினர்களிடையில், சமுதாயத்தில்,சபையில் உரிய மதிப்புடன் இல்லாமல் இருக்கலாம். நாம் கர்த்தரை தேடும்போது, நம்முடைய பெலவீனங்களை அவரிடம் சொல்லி, கண்ணீர்விட்டு ஜெபிக்கும்போது கர்த்தர் உதவி செய்கிறார். பழைய ஏற்பாட்டில் மாபெரும் தலைவனாக இருந்த மோசே திக்குவாயும், மந்த நாவும், உள்ளவனாக இருந்தான் (யாத்.4:10) ஆனால் பிதாவாகிய தேவன் அவனைத் தெரிந்துகொண்டு, தம்முடைய ஜனங்களை வழிநடத்திச் செல்வதற்கு தலைவனாக தெரிந்துகொண்டார். அவன் அதை ஏற்க தயங்கும்போது ***நீ போ, நான் உன் வாயோடே இருந்து நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்பேன்*** என்கிறார்(யாத்.4:12). புதிய ஏற்பாட்டில் நாம் பார்க்கும்போது வைராக்கியமாக இருந்து கிறிஸ்துவின் சபையை பல இடங்களில் ஸ்தாபித்த அப்போஸ்தலன் பவுல், தன் சரீரத்தில் பலவீனப்பட்டிருந்தான். சரீரத்தில் குறையுடன் காணப்பட்டான். ***என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது என்னை விட்டு நீங்கும்படிக்கு நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில்வேண்டிக் கொண்டேன். அதற்கு அவர் என் கிருபை உனக்குப்போதும், உன் பெலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்.*** என்று கர்த்தர் சொல்லி விட்டார்(2.கொரி.12:7-9)

***ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும் இல்லாதவைகளையும் தேவன் தெரிந்து கொண்டார்*** (1.கொரி.1:27-28). இன்றைக்கு உலகத்தில் கல்விமான்களும், மேதைகளும், உயர்மட்டத்தில் இருப்பவர்களும் உண்மையான சத்தியத்தை புரிந்து கொள்ள மறுக்கிறார்கள்.அற்பமாய் எண்ணப்பட்ட நமக்கு புதிய ஏற்பாட்டின் சத்தியம் கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து தம் இரத்தத்தை சிந்தி சம்பாதித்த ஒரே சபையை வெகு சிலர்தான் அடையாளம் கண்டு கொண்டுள்ளனர். கல்விமான்களுக்கு மறைத்து, பேதைகளுக்கும், பாலகருக்கும்,

வெளிப்படுத்தியுள்ளார். இதையறிந்து நாம் தேவனுடைய பலத்தோடே உண்மைச் சத்தியத்தை ஓங்கி ஒலிக்கவேண்டும். தம்மை உண்மையாய் நேசிக்கிற அவருடைய பிள்ளைகளின் பலவீனத்தை கர்த்தர் பாராமல் இருப்பதில்லை. லேயாள் அற்பமாய் எண்ணப்பட்டதைக் கர்த்தர் காண்கிறார். லேயாள், ரூபன், சிமியோன், லேவி, யூதா, இசக்கார், செபுலோன் ஆகிய ஆறு குமாரரையும், தீனாள் என்ற குமாரத்தியையும் பெற்றெடுக்கிறாள். யாக்கோபுக்கு பிறந்த 12 பேரும் கோத்திரப்பிதாக்கள் என்றழைக்கப்பட்டனர். அதில் லேயாளுக்குப் பிறந்த லேவியும், யூதாவும் விசேஷமானவர்கள். லேவி கோத்திரத்தார் ஆசாரிப்புக் கூடாரத்தில் ஆசாரிய ஊழியம் செய்யத் தகுதி பெற்றனர். யூதா கோத்திரம் மிகவும் விசேஷமானது. நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து யூதா கோத்திரத்தில் அவதரித்துப் பிறந்தார்.

கூச்சப் பார்வையைக் கொண்ட லேயாளின் கர்ப்பப்பிறப்பு விசேஷமான இடத்தைப் பெறுகிறது. ஏனென்றால் கர்த்தர் அவள் அற்பமாய் நடத்தப்பட்டதைக் காண்கிறார். அவளுக்கு சரீரத்தில் இருந்த குறை கூச்சப்பார்வை. இன்றைக்கும் நம்மில் அநேகர் பலவீனமுள்ளவர்களாக இருக்கிறோம். கர்த்தர் நம்மைக்காண, நாம் அவருக்கு அனுமதி கொடுக்கவேண்டும். வேதத்தில் நிபந்தனைகளாக கொடுக்கப்பட்டவைகளை நாம் ஏற்று நடக்கவேண்டும். நமக்கு இருக்கும் குறைகளையே பெரிதாக நினைத்து கர்த்தர் நம்மைக் கொண்டு செய்ய இருக்கும் காரியங்களுக்கு நாமே தடையாக மாறிவிடக்கூடாது. நம்முடைய பெலவீனங்களைப் பார்த்து ஒருவேளை மற்றவர்கள், ***இது இவன் செய்த பாவமா? இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமா?*** என்று யோவான் 9-ம் அதிகாரத்தில் அந்த பிறவிக்குருடனைப் பார்த்து கேட்டதைப் போல நம்மையும் கேள்விகள் கேட்கக்கூடும். தேவனுடைய நாமம் மகிமைப்படுவதற்காகத்தான் இவ்வாறு பலவீனங்கள் காணப்படுகின்றன என்பதே இதன் விடை.

அற்பமாய் எண்ணப்பட்ட லேயாளின் வயிற்றில் பிறந்த யூதாவினுடைய வம்சத்தை தேவன் ஆசீர்வதித்தது போல அற்பமாய் எண்ணப்படுகிறோமே என்று அங்கலாய்க்கும் ஒவ்வொருவருக்கும் இயேசுகிறிஸ்து போதுமானவராயிருக்கிறார். அவரிடத்தில் எல்லா ஆசீர்வாதங்களும் இருக்கிறது. ஆனால் அவர் நம்மிடத்தில் எதிர்ப்பார்க்கிற காரியங்கள் என்ன என ஆராய்ந்து வேத வசனங்கள் என்ன சொல்லுகிறதோ அதன்படி நடந்தால் நம்மையும் தேவன் கண்டு நம் சிறுமையை நீக்குவார்.

ரேச்சல் இராஜநாயகம்.

வாலிபர் பகுதி

# வயல்வெளிக்கு வாருங்கள்

வயல்வெளிகளில், தாரணி மீது தேவன் விரித்த பச்சைக் கம்பளமாகிய கதிர்மணிகள், வான்நோக்கி வளர்ந்து, முதிர்ந்து பின்பு வளைந்து, களஞ்சியம் செல்லக் காத்துக்கொண்டிருப்பதைக் காண்கிறவர்கள் புளகாங்கிதமடையும் வேளையில், அறுவடைக்கு ஆயத்தமாகயிருக்கிற அக்கழனி செழித்தோங்கி செந்நெற்கதிர் மணிகளாய், தங்கச் சுரங்கமே தரையில் விரித்ததுபோல் எங்கு நோக்கினும் சிரித்து குலுங்கும் இந்நிலையை அடைய, கழனியின் காவலன் வயல்களை வரப்பறுத்து, மழை நீரை வகைப்படுத்தி, வாய்க்கால்களில் பாயவிட்டு, வயல்களுக்குப் பாய்ச்சி, நல்ல நாற்று நட்டு, உரமிட்டு அறுதிவரைக்கும் அயராது உழைத்திருப்பானென்பது உறுதி.

விவிலியம் வயல்களை ஆவிக்குரிய வாழ்க்கைக்கு ஒப்பிட்டுப் பேசுகிறது. மெய்ஞ்ஞானம் வேண்டுமென்ற விண்ணப்பமாகிய விதையை விதைத்து, விளையச்செய்கிற தேவனால் தன் அறிவுக் களஞ்சியத்தை ஞானக்கதிர்மணிகளால் நிரப்பிய சாலொமோன் இயம்புகையில் " .... ***நீதியை விதைக்கிறவனோ மெய்ப்பலனைப் பெறுவான்.*** " (நீதி.11:18), "***அநியாயத்தை விதைக்கிறவன் வருத்தத்தை அறுப்பான்....***" (நீதி.22:8) என்கிறார்.வாலிபர்களாகிய நாம் வாழ்க்கை என்னும் வயலில் நம் கிரியைகளாகிய விதையை எப்படி விதைக்கிறோமோ அதையே முடிவில் அறுப்போம் என்பதை அறிய எத்தனிப்போம்.

## எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம்

புறஜாதிகளுக்குக் கிறிஸ்துவின் அளவற்ற ஐசுவரியமாகிய சுவிசேஷத்தை அறிவிக்கும்படி இயேசுவால் தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரமான பவுல் " கலாத்தியா சபைக்கு எழுதுகையில்,....***மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்***" (கலா.6:7)என்று யாத்துக் கொடுத்திருக்கிறார். இயற்கையின் நியதியை இங்கே ஆவிக்குரிய வாழ்க்கையின் நியமமாகவும் பவுல் அடியார் பறைசாற்றுகிறார்.

ஆதியிலே தேவன் அண்ட சராசரங்களைப் படைக்கையில், பூமியில் புல்லும் விதையும் தங்கள் தங்கள் வகையின்படி, முளைத்தெழும்பும் விதைகளைத் தாங்கும் கனிகளை உடையதாய்ப் படைத்தார். (ஆதி.1:11) இயற்கையின் சட்டம் நமக்கு என்ன சொல்லுகிறதென்றால், முட்செடியின் விதையை விதைத்து விட்டு திராட்சைப் பழக்கொடியை எதிர்பார்ப்பது பகுத்தறிவுடையோர் செய்யும் செயலல்ல. அதைத்தான் பவுல் விதைப்பதையே அறுப்போம் என ஆணித்தரமாய் கோடிட்டுக் காட்டுகிறார்.

விதைக்கும் காலமாகிய இளமைப் பருவத்தில் எவ்வகை விதையை நாம் விதைக்கிறோமோ அதையே அறுப்புக்காலமாகிய முதிர்வயதிலும், மறுமையிலும் அறுப்போம் நண்பர்களே! கற்கும் காலத்தில் கல்வியைக் கசடற கற்பதில் கவனம் செலுத்தாமல், கவின்மிகு காட்சிகளால் கவர்ந்திழுக்கப்பட்டு சிற்றின்ப பழக்கத்திற்கு சிறையாக இப்பொழுதே வித்திட்டோமானால் அதன் பலனாக

பலவகை உயிர்க்கொல்லிநோய்கள் நம்மைத் துரத்திப்பிடித்து பின்பு உயிரைக்குடிக்கும்.பயிர் செய்யவேண்டிய இப்பருவத்தில் முயன்றுழைத்து கர்த்தரிடத்தில் கண்ணீர் மல்க, ***என் விளைச்சலை ஆசீர்வதியும்*** என்று கெஞ்சி மன்றாடி, அத்தோடு நிறுத்தாமல் அவர் நம்மை ஆசீர்வதிக்க ஏதுவாக நம் கிரியைகளை வேதத்தின் துணைகொண்டுஒழுங்குபடச் செய்வோமானால், அவரின் இருதயத்திற்கேற்ற தாசனாகிய தாவீதின் கூற்றுக்கேற்ப, ***கண்ணீரோடே விதைக்கிற நாம் கர்த்தரின் ஆசீர்வாதத்தால் கெம்பீரத்தோடே அறுப்போம். (சங்.126:5)***

## விதைப்பதை விட அதிகமாய் அறுப்போம்

நரர்வுலகை மீட்க வந்த விண்மணியாம் நசரேயனாகிய இயேசு கிறிஸ்து இம்மண்ணகத்தில் ஒரு மாபெரும் போதகராகவும், நன்மை செய்பவராகவும் சுற்றித்திரிந்தார். அவர் திருவாய் மொழிந்த ஒரு உண்மையை அவருக்கன்பான சீடனாகிய யோவான் வடித்துக்கொடுத்திருக்கிறார் கவனியுங்கள். "..... ***கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்.***" (யோவான் 12:24)

நமது இரட்சகர் கூறுவதைக் கவனித்தீர்களா! ஒரு விதை பூமியில் விழுந்து, புதைந்து வளர்ந்தால் மிகுந்த பலனைக் கொடுக்கிறது. ஒருவேளை, விதைக்கும் அளவுதான் பலன் தரும் என்று தேவனால் நியமிக்கப்பட்டிருக்குமானால், விவசாயத்தை வாழ்க்கைக்காக பயன்படுத்துவோர் அவனியில் யாரும் இருக்கமாட்டார்கள். வாலிபர்களே! நீங்கள் நன்றாய் அறிந்துகொள்ளவேண்டியது என்னவென்றால், நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம் என்பதோடல்லாமல் அதைவிட அதிகமாக அறுவடைசெய்வோம் என்பதுதான்.

நமதாண்டவர், " ***இதோ சீக்கிரமாய் வருகிறேன் ; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது*** " (வெளி.22:12) என்று வாக்களித்திருக்கிறார். நாம் இந்த உலகத்திற்குரிய மாமிச இச்சைகளை விதைத்தால், இவ்வுலகிலும் ஆரோக்கியமாய் வாழமுடியாது, இனிவரும் வாழ்க்கையிலும் நாம் இழந்து போனவர்களாகவே காணப்படுவோம். கவனிக்கவேண்டியதென்னவெனில் நாம் ஒன்றைத்தான் விதைக்கிறோம் என்றாலும் நாம் இரண்டை அறுவடை செய்கிறோம். ஆகவேதான் விதைப்பதை விட அதிகபலனை அறுப்போம் என்ற இச்செய்தி நம்மை எச்சரித்து நல் விதைகளை இந்த வாலிப வயலில் தூவ தூண்டவேண்டும்.

வாலிபர்களே!மாமிச இச்சைக்கான விதைகளை விதைத்தால்அதிக பலனை அறுப்போம் என்ற விஷயம் நமக்குக் கிலியைத்தருகிறவேளையிலும் அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்தால் அதே செய்தி நமக்கு அதிக களிப்பைத் தரவேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவதுபோல் "... ***அவருடைய பிரசன்னமாகுதலை விரும்பும்யாவருக்கும் நீதியின் கிரீடத்தைத் தந்தருளுவார்.***" (2தீமோ.4:8). விவிலியம் விளம்புவதையெல்லாம் இவ்வாலிபப் பிராயத்திலிருந்தே விளங்கிக்கொண்டு இம்மியும் விலகாமல், வழுவாமல், விழாமல் வாழ்வோமானால், வானத்திலிருந்து விண்ணவர் வெளிப்படும்போது அவரோடு மகிமையில் ஏறெடுக்கப்படுவோம்.

## விதைக்கும் காலத்தை விட அறுக்கும் காலம் அதிகமாயிருக்கும்

ஒரு விவசாயி, நிலத்தை நெற்சேர உழுதுழுது, பண்படுத்தி, விதைப்பதற்கு எடுக்கும் நாழிகையை விட, பயிரிடும் அவன், களைகளைக் கண்டெடுத்து, நற்பயிர்களிடமிருந்து அதைப்பிரித்து, அக்கினியில் சுட்டெரித்தபின், தனக்கு மிகுந்தபலனாகக் கிடைக்கப் பெற்றிருக்கும் விளைச்சலை அறுவடை செய்து அத்தோடு நில்லாமல் பதர்களையும், கதிர்மணிகளையும் பிரித்தெடுத்து களஞ்சியத்தில் சேர்க்கும் கால அளவு அதிகமானது என்று எல்லோரும் ஏற்றுக்கொள்வோம்.

வாலிபர்களாகிய நாம் வாழ்க்கை எனும் விளைநிலத்தில் ஏதோ ஒருவகையான விதையை விதைப்பது ஒரு எளிதான காரியம்தான். பின்விளைவுகளைப் பற்றி யோசிக்காமல் எந்தவொரு செயலையும் லேசாய் செய்து விடலாம், ஆனால் நாம் விதைத்த அந்த விதை பயிராகி, அதன் பலனைக் கொடுக்கும்போதுதான் நாம் புரிந்த தவறை உணருவோம். அப்படி உணர்வுமாத்திரமடைந்தாலும் பரவாயில்லை, நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அதன் பலனை புசித்தே தீரவேண்டும் என்ற போதுதான் தீயிலிட்ட மெழுகாய் உள்ளமெல்லாம் உருகுகிறது.

வாலிபர்களே! மற்றொரு காரியத்தை நீங்கள் புரிந்து கொள்வது அவசியம். நம்முடைய சரீரம் பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாயிருக்கிறது, நாம் அதைக் கெடுத்தால் பரலோகத்தின் தேவனும் நம்மைக் கெடுப்பார். *(1.கொரி.6:11)*. நமதாண்டவரின் இரண்டாம் வருகையில் நம் சரீரமும், ஆவியும் கறைப்பட்டிருக்குமானால் பிசாசுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் ஆயத்தமாயிருக்கும் அக்கினிக் கடலில் எண்ணிலடங்கா வருஷத்தை நாம் செலவிடவேண்டியதிருக்கும். நாம் சிற்றின்பத்தில் இடறிவிழ சிறிதுநேரமே ஆனாலும் அதன் விளைவை நித்தியகாலமாய் அனுபவிப்போம், ஆகவேதான் விதைப்பதைவிட அதிக காலம் அறுப்போம் என்பதறிந்து நம் சரீரத்திலும், ஆவியிலும் தேவனை மகிமைப்படுத்துபவர்களாயிருப்போமானால், பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது நாம் அவருடன் நித்தியத்தைக் கழிப்பவர்களாக இருப்போம். *(1.கொரி.6:20; மத்.25:40-45)*.

வாலிபனே! சிந்திக்காமல் சிறிதுநேரசிற்றின்பத்திற்காக மாம்ச இச்சைக்கு இணங்கி, அதன் பலனாக காலமெல்லாம் கண்ணீர்விட்டு இப்பூவுலக வாழ்க்கையையும் சீராய் வாழாமல், வருத்தத்தோடு நாட்களை கழித்துவிட்டு மனந்திரும்பாமல் மாண்டுவிடுவோமானால் மறுமையையும் இழந்து விடுவோம் என்பதறிந்து, இளமைவயலில் வேதவசனம் என்ற விதையை விதைத்து, விசுவாசம் என்னும் பயிர்வளர்த்து, மனந்திரும்புவதால் களையெடுத்து, இயேசுவை தேவசுதன் என்ற அறிக்கையெனும் உரமிட்டு, ஞானஸ்நானம் என்னும் தண்ணீர்பாய்ச்சி, செழித்து குலுங்கும் கதிர்மணிகள்போல் கிறிஸ்துவுக்குள் வளர்ந்து அறுதிவரை நிலைத்து நின்று களஞ்சியத்தில் சேர முயற்சிப்போமாக!

ஜே. பிக்கின்ஸ்

# எண்ணாகமம் ஒரு கண்ணோட்டம்

**I. பொருள்** : ஜனங்கள் எண்ணப்படுதலைக் குறிக்கிறது

**II. ஆசிரியர்** : மோசே

**III. காலம்** : ஏறக்குறைய கி.மு. 1400

**IV. முக்கிய வார்த்தை** : சேவை

**V. எழுதப்பட்ட நோக்கம்** : சீனாய் மலையிலிருந்து மோவாபின் சமவெளிக்கு தேவன் இஸ்ரவேலை எப்படி வழிநடத்தினார் என்பதைக் காட்டுவது.

**VI. இதுதரும் பாடம்:**

முறுமுறுப்பையும், கீழ்ப்படியாமையையும் தேவன் வெறுக்கிறார்

**VII. பிற தகவல்கள்**

**A.** இந்நூல் ஏறக்குறைய 40 வருட காலத்தை உள்ளடக்கி இருக்கிறது. ஆனாலும் இந்நூலில் சொல்லப்பட்ட செய்திகள் இரண்டாம் மற்றும் பதினான்காம் வருடங்களுக்கு மாத்திரமே பொருந்தும்.

**B.** இந்நூல், இஸ்ரவேல் தேவனுக்கு ஆராதனை செய்பவர்களாகவும் மற்றும் போர்வீரர்களாகவும் வளர்ந்ததைக் காட்டுகிறது.

**C.** எண்ணாகமம், தேவனுடைய தன்மையையும் அவருடைய தெய்வீக வழிநடத்துதலையும் எடுத்துரைக்கும் ஒன்றாக உள்ளது.

a. தேவனுடைய பிரமாணங்கள் இப்புத்தகம் முழுவதிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் சொல்லப்பட்ட சம்பவங்களைத் தொகுத்துப் பார்த்தால், யெகோவா நீதியும், நியாயமும், பரிசுத்தமும், கிருபையும் உள்ளவர் என்பது தெரியும்.

**b.** ஜனங்கள் கீழ்ப்படியாமலும், கலகமுமுள்ளவர்களாய் இருக்கும்போது, அவர்களைத் தண்டித்தார். ஆனால் அவர்கள் மனந்திரும்பும்போது மன்னித்து மீட்டமைத்தார்.

**c.** தேவன் அவர்களுக்குள் நடப்பித்த ஒவ்வொரு காரியமும், தன்னோடு அவர்களை இன்னும் நெருங்கி சேர்த்துக் கொள்ளும்படியாகவே இருந்தது. அவர்கள் அவருக்கென்று கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவர்கள்.

---

பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலர்களைப் போல, புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களாகி நாம் "மேகத்தூணால்" (கிறிஸ்து) வழிநடத்தப்பட்டு, " வானத்திலிருந்து இறங்கி வந்த அப்பத்தினால் " (கிறிஸ்து) போஷிக்கப்பட்டு, " கன்மலையின் நீரால் " (கிறிஸ்து) தாகந் தீர்க்கப்பட்டு, எதிரிகளை மேற்கொண்டு, யுத்தங்கள் புரிந்து வாக்குத்தத்த தேசத்திற்கு (பரலோகம்) முன்னேறிச் செல்லவேண்டும்.

---

## வாசகர்களின் கவனத்திற்கு

1. விலாசம் மாறிச் செல்லும் வாசகர்கள், தங்கள் பழைய மற்றும் புதிய விலாசம் இரண்டையும், அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் (Pin code), ஓர் அஞ்சல் அட்டையில் தெளிவாக எழுதி அனுப்புங்கள்.

2. புத்தகங்கள் மற்றும் கைப்பிரதிகளுக்காக மணியார்டர் செய்பவர்கள், M.O. கூப்பனில் உள்ள Space for Communication பகுதியில், உங்கள் முகவரியைத் தெளிவாக அனுப்புங்கள்.

3. இரண்டு திருமறை ஆசான் மாத இதழ் பெறுபவர்கள், உடனடியாக எங்களுக்கு தகவல் , மற்றவர்களுக்கு அனுப்பிக் கொடுக்க உதவியாக இருக்கும்.

நன்றி!

ஆசிரியர்.

# வெளிப்படுத்தின விசேஷம்

## அதிகாரம்: நான்கு

வெளிப்படுத்தின விசேஷம் 2,3 அதிகாரங்களில், ஆசியாவிலிருந்த ஏழு சபைகளுக்கு நிருபங்கள் கொடுக்கப்பட்டதற்குப் பிறகு, அப்போஸ்தலன் யோவான் பரலோகத்தில் ஒரு வாசல் திறக்கப்பட்டிருப்பதைக் கண்டான் (வெளி.4:1). வெளிப்படுத்துதல் நான்காம் அதிகாரம், தேவன் பரலோகத்திலுள்ள சிங்காசனத்தில் வீற்றிருக்கும் ஒரு தரிசனத்தைக் கொண்டுள்ளது. இந்த தரிசனத்தை நாம் படிக்கும்போது, ஒன்றாம் அதிகாரத்தின் முதல் இரண்டு வசனங்களையும், 19-ம் வசனத்தையும் நாம் நினைவுக்குக் கொண்டுவருகிறோம். அவைகள், யோவான் எதைக் காண்கிறாரோ அவைகளைத்தான் எழுதுகிறார் என்று சொல்லுகிறது. இந்த நான்காம் அதிகாரத்தில் அது கனகச்சித்தமாக நிறைவேறியுள்ளது. யோவான், பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலைக் கண்டான், மற்றும் எக்காள சத்தம் போன்ற ஒரு சத்தத்தைக் கேட்டான் (வெளி.4:1). இன்னும் சிங்காசனத்தையும், சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டான் (4::2). மேலும், அந்த சிங்காசனத்தைச் சூழ இருபத்து நான்கு மூப்பர்கள் உட்கார்ந்திருப்பதையும் கண்டான் (வெளி.4:4) நான்காம் அதிகாரத்திலுள்ள அனைத்துமே, யோவான் கண்டவைகளின், கேட்டவைகளின் தொகுப்பாகவே உள்ளது. உண்மையில், வெளிப்படுத்தலில் உள்ள மீதி அதிகாரங்களிலும் இதே முறை பின்பற்றப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம்.

ஒன்றாம் அதிகாரத்தில், பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த வாசலிலிருந்து, யோவான் கேட்ட முதல் சத்தமானது, எக்காளசத்தம் போலிருந்தது. இந்தப் புத்தகத்தின் ஆரம்பத்தில், இயேசுவின் சத்தமானது எக்காள சத்தம் போலிருந்தது என்று பார்த்தோம். (வெளி.1:10). ஆனால், நான்காம் அதிகாரத்திலுள்ள இந்த சத்தமானது கிறிஸ்துவல்ல. ஏனெனில், இந்த புத்தகத்தின் இறுதிவரை, யோவானிடத்தில் கிறிஸ்து நேரிடையாகப் பேசுகிறார் என்று எழுதப்படவில்லை.ஒருவேளை அந்த சத்தம் யாருக்குச் சொந்தமானதாக இருந்தாலும், அது யோவானிடம், இங்கே ஏறிவா, இவைகளுக்குப் பின்பு சம்பவிக்க வேண்டியவைகளை உனக்குக் காண்பிப்பேன் என்று விளம்பினது.இந்த அறிக்கையானது, வெளிப்படுத்தல் நூலில் மீதியாகச் சொல்லப்பட்டிருக்கிற அனைத்தும், யோவானுக்கு பரலோகத்தில் காண்பிக்கப்பட்டவை என்பதற்கான ஒரு முக்கியமான அஸ்திபாரத்தைப் போடுகிறது. நம்முடைய பாடத்தின் இத்தருணத்தில், நாம் கவனிக்க வேண்டிய இரண்டு காரியங்கள் உண்டு.

முதலாவது, சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகள் என்று யோவானுக்கு எவைகள் காட்டப்பட்டதென்று ஒன்றாம் அதிகாரத்தில் உள்ளதோ அவைகளை நினைவுக்குக் கொண்டு வருதல். இது, வெளிப்படுத்தல் புத்தகமானது, யோவான் தரிசனத்தைப் பெற்றுக்கொள்கிற அந்தச் சமயத்தில், நிறைவேறக்கூடிய தரிசனங்களைக் கொண்டிருக்கிறதென்பதை நமக்கு மீண்டும் நினைவுபடுத்துகிறது. அதாவது, இந்தப் புத்தகத்தில் நாம் வாசிக்கும் பெரும்பாலானவை (கண்டிப்பாக உலகத்தின் முடிவு, நியாயத்தீர்ப்பு, பரலோகம், நரகம் என்பவைகளை விவரிக்கும் பகுதி நீங்கலாக) ரோம சாம்ராஜ்ஜியத்தின் நாட்களிலேயே நிறைவேறிவிட்டது என்பதே. இரண்டாவது, வெளிப்படுத்தலில் எல்லா சம்பவங்களையும் நாம் பரலோக கண்ணோட்டத்துடன் தான் பார்க்கிறோம். பூமிக்குண்டான கண்ணோட்டத் தோடல்ல. இந்த தரிசனத்தில், இவையனைத்தையும் பரலோகத்திலிருந்து யோவான் காண்கிறார். இது நமக்கு வல்லமை மிகுந்த அனுகூலமான ஒன்றையே கொடுக்கிறது. ஆனால், இந்நூலில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அனைத்தையும் புரிந்து கொள்வதற்கு சிரமமும் உண்டு.

இரண்டாம் வசனத்தில் யோவான் உடனடியாக ஆவிக்குள்ளாகி, (1:10ல் உள்ளதைப் போன்ற ஒரு விவரிப்பாக இது உள்ளது). பரலோகத்தில் ஒரு சிம்மாசனம் வைக்கப்பட்டிருக்கிறதையும்,அந்த சிங்காசனத்தின் மீது ஒருவர் வீற்றிருக்கிறதையும் கண்டான். யோவான் இவரை, எட்டாம் வசனத்தில் சர்வவல்லமையுள்ள தேவன் என்று அழைப்பதாலும், 5:7-ல் சிங்காசனத்தில் உட்கார்ந்திருந்தவருடைய வலது கரத்திலிருந்து ஆட்டுக்குட்டியாகிய இயேசுவானவர் புத்தகத்தை வாங்குவதாலும், அவர் பிதாவாகவே இருக்கவேண்டும். ஆனால், யோவான் பிதாவை நேரிடையாகத் தன் புறக்கண்களால் காணவில்லை. (யாத்.33:20; யோவான் 1:18; 1தீமோ.6:16) யோவான் அவரை ஆவிக்குள்ளான நிலையில்தான் பார்த்துள்ளான். இது ஒரு தரிசனம்.

ஆயிரம் வருட அரசாட்சிக் கொள்கைக்காரர்கள், வெளி.4:1-2 பகுதியை தவறாகப் புரிந்து கொண்டு, தவறான கொள்கையைப் போதிக்கின்றனர். இயேசுக்கிறிஸ்து மீண்டும் வரும்போது, ஏழு வருடம் பரவசமடைதல் இருக்கும் என்று நம்புகின்றனர். இதிலிருந்து, உண்மையில் அவர்கள் கிறிஸ்துவின் இரண்டு வருகை இருக்கிறது என்று போதிக்கின்றனர்.ஆனால் வேதாகமம், இன்னும் கிறிஸ்துவின் ஒரு வருகைதான் இருக்கிறது என்றும், அதன் பின் நியாயத்தீர்ப்பு நடக்கும் என்றும் போதிக்கிறபடியால் (எபி.9:27,28) அவர்கள் கொள்கை தவறு என்பதற்கு, இதுவே போதுமான அத்தாட்சியாயிருக்கிறது.ஆயிரம் வருட அரசாட்சியாளர்கள், முடிவிலே கிறிஸ்து முதல் முறை வருவது, பரிசுத்தவான்கள் மாத்திரம் அறிந்துகொள்ளும்படியான அளவில், இரவில் திருடன் வருகிறவிதமாய் இரகசிய வருகையாக இருக்குமென்று போதிக்கின்றனர். இந்த வருகை பரிசுத்தவான்களுக்கானது என்றும், அப்பொழுது மரித்த பரிசுத்தவான்களின் திடீர் உயிர்த்தெழுதலும், உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களின் மறுரூபமாக்கப்படுதலும் நடந்து அவர்கள் நேரிடையாக ஏழுவருட பரலோக பேரானந்தத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் போதிக்கின்றனர்.

அடுத்து, கிறிஸ்து இரண்டாம் முறையாக முடிவிலே வருவது, ஒவ்வொருவரும் கண்டு கேட்கும்படியான அளவில் இரைச்சலுள்ளதாக இருக்கும் என்று சொல்லுகிறார்கள். கிறிஸ்துவின் இந்த வருகை, ஏழுவருட பரலோக பேரனாந்தத்தைத் தொடர்ந்து, எடுத்துக்கொள்ளப்பட்ட பரிசுத்தவான்களோடு, இப்பூமியில் ஆயிரம் வருட அரசாட்சி செய்யும்படி, கிறிஸ்துவானவர்,எருசலேமில் பூமிக்குரிய இராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பார் என்று எந்த நிரூபணமுமில்லாமல் சொல்லுகின்றனர். இந்த கொள்கைக்கு வேத வசனங்களின் ஆதாரம் எதுவும் நிச்சயமாக இல்லை. வேத வசனங்களிலெங்கும் பரவசமடைதல் பற்றியோ அல்லது இன்னும் இரண்டு வருகை உண்டு என்பது பற்றியோ அல்லது பூமிக்குரிய இராஜ்ஜியத்தில் கிறிஸ்து ஆளுகை செய்வார் என்பது பற்றியோ நாம் காணமுடியாது. ஆனால் ஆயிரம் வருட அரசாட்சிக்கொள்கையாளர்கள், வெளி.*4:1-2*ஐ அவர்கள் நம்பும் பரவசமடைதலுக்கு இணையான பகுதியாகத் தெரிகிறதென்று நம்புகின்றனர். வெளி.*4:1-2*ல் யோவான் தீடீரென பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது பரவசமடைதல் நடக்கும்போது இப்படித்தான் இருக்குமென்று , முன்கூட்டியே அறிவிக்கும் ஒரு செயலாக உள்ளதென்று சொல்லுகின்றனர்.ஆனால், இந்த வசனங்களைப் பரீட்சித்துப் பார்த்தால்,அது முற்றிலும் தவறாக இருக்குமென்று காட்டுகிறது. வெளி.*4:1-2*ல் ஒரு வெளிப்படுத்துதலைப் பெற்றுக்கொள்ளத்தான் யோவான் தரிசனத்தில் பரலோகம் செல்கிறான். பரவசமடைதல் என்ற ஒரு பரிசைப் பெற்றுக்கொள்வதற்காக அவன் பரலோகம் சென்றான் என்றெல்லாம் இப்பகுதி நமக்குச் சொல்லுவதில்லை. மிக மோசமான கொள்கையாகிய பரவசமடைதல் பற்றியோ அல்லது ஆயிரம் வருட அரசாட்சிக்காரர்களின் வேறு எந்தக் கொள்கை பற்றியோ நாம் வெளி.*4:1-2*லோ அல்லது வேதாகமத்தில் எந்தவொரு பகுதியிலோ கண்டுப்பிடிப்பதற்கு எந்தவொரு ஆதாரமும் இல்லை. இல்லவே இல்லை.

வெளிப்படுத்தல் *4*-ல் தேவன் பற்றியும், அவருடைய சிங்காசனம் பற்றியும் படிக்கும்போது, நாம் ஏசாயா *6:1-8* வேதபகுதியை நினைவுபடுத்தப்படுகிறோம், அங்கே கர்த்தர் அவருடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கக் கண்டேன் என்றுள்ளது.சங். *47:8*ல் தேவன் ஜாதிகள் மேல் அரசாளுகிறார்; தேவன் தமது பரிசுத்த சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறார் என்றும் சங் *93:1*-ல் கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார், மகத்துவத்தை அணிந்து கொண்டிருக்கிறார் என்றும், வசனம் *2*-ல் உமது சிங்காசனம் பூர்வமுதல் உறுதியானது; நீர் அநாதியாயிருக்கிறீர் என்றும், வசனம் *4*-ல் திரளான தண்ணீர்களின் இரைச்சலைப் பார்க்கிலும், சமுத்திரத்தின் வலுமையான அலைகளைப் பார்க்கிலும், கர்த்தர் உன்னதத்திலே வல்லமையுள்ளவர் என்றுமுள்ளது. தேவன் தமது சிங்காசனத்தில் வீற்றிருப்பதை வெளி.*4:3*ம் வசனம் அவர் பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார் என்றும் அந்த சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில்

இருந்தது,அது பார்வைக்கு மரகதம் போல் தோன்றிற்று என்று விவரிக்கிறது. வசனம் 4-ல் அந்த சிங்காசனத்தைச் சூழ இருபத்து நான்கு சிங்காசனங்களிருந்தன. இருபத்து நான்கு மூப்பர்களும் வெண்வஸ்திரந்தரித்து, தங்கள் சிரசுகளில் பொன்முடிசூடி அந்தச் சிங்காசனங்களின்மேல் உட்கார்ந்திருக்கக்கண்டேன் எனவும்,வசனம் 5-ல் அந்த சிங்காசனத்திலிருந்து மின்னல்களும், இடிமுழக்கங்களும், சத்தங்களும் புறப்பட்டன;தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள், சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்து கொண்டிருந்தன எனவும், வசனம் 6-ல் சிங்காசனத்திற்கு முன்பாகப் பளிங்குக்கொப்பான கண்ணாடிக் கடலிருந்தது என்றுமுள்ளது. வசனம் 6 முதல் 8 வரையிலும், அந்தச் சிங்காசனத்தின் மத்தியிலும், அந்த சிங்காசனத்தைச் சுற்றிலும் நான்கு ஜீவன்கள் இருந்ததை விவரிக்கிறது. அவைகள் முன் புறத்திலும் பின் புறத்திலும் கண்களால் நிறைந்திருந்தது (4:6). அவைகள் ஒவ்வொன்றும் அவ்வாறு சிறகுள்ளவைகளும், சுற்றிலும் உள்ளேயும் கண்களால் நிறைந்தவைகளுமாயிருந்தது(4:8). முதலாம் ஜீவன் சிங்கத்திற் கொப்பாகவும், இரண்டாம் ஜீவன் காளைக் கொப்பாகவும், மூன்றாம் ஜீவன் மனுஷ முகம்போன்ற முகமுள்ளதாகவும், நான்காம் ஜீவன் பறக்கிற கழுகுக்கு ஒப்பாகவுமிருந்தன. (4:7). மொத்தத்தில் இது அழகும், வல்லமையும், சுத்தமும், பரிசுத்தமும் ஒருங்கிணைந்த ஒரு காட்சியாக இருக்கிறது.

இருபத்து நான்கு மூப்பர்கள் என்பதை வெளிப்படுத்தலில் நாம் பலமுறை காண்கிறோம். (வெளி.5:5,6,8,11,14; 7:11,13; 11:16; 14:3; 19:4) நான்கு மிருகங்கள் என்பதையும் கூட (வெளி.5:6,8,11,14,5,6) இருபத்து நான்கு மூப்பர்களும், தேவனுடைய ஏழு ஆவிகளும், நான்கு ஜீவன்களும். என்பது யார்? மூப்பர்களின் எண்ணிக்கை இருபத்து நான்கு என்பது முக்கியமானது. வெளி.21:12-14-ல் பழைய ஏற்பாட்டிலுள்ள இஸ்ரவேலின் 12 கோத்திரங்களையும் குறிக்கும் 12 வாசல்கள் பரலோக நகரத்தில் இருக்கிறது எனவும், புதிய பிரமாணத்தின் 12 அப்போஸ்தலர்களைக் குறிக்கும், 12 அஸ்திபாரங்கள் நகரத்தின் மதிலில் உண்டு எனவுமுள்ளது. மோசேயினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுவதற்கு, தேவன் ஜனங்களின் மூப்பர்களை முக்கியப்பங்காற்றும்படி தெரிந்து கொண்டார். (லேவி.4:15 எண்.11:16-17,24-25; உபா.19:11-12,21:1-9,18-21;22:13-21; 25:5-10;27:1) மூப்பர்கள் (வேத வசனங்களின் தகுதியைப் பெற்றவர்கள்) புதிய ஏற்பாட்டின் கர்த்தருடைய சபையில், அதைக் கண்காணித்து மேய்க்கின்ற மிக முக்கியமான பொறுப்பை வகிக்கிறார்கள்.(அப்.20:17; அப்.20:28; 1தீமோ.3:1-7;5:17-18; தீத்து.1:5-11;எபி.13:17;1.பேது.5:1-4). இந்த இருபத்து நான்கு மூப்பர்கள், இரண்டு ஏற்பாடுகளிலுமுள்ள தேவ ஜனங்களின் தலைவர்களை அடையாளப்படுத்துகிறார்கள் என்பதற்கு வாய்ப்புண்டு. அவர்கள் யாராக இருந்தாலும், நீதிக்கு அடையாளமான வெண் வஸ்திரம் தரித்திருக்கிறார்கள். (வெளி.9:18) இந்த வஸ்திரம் ஜெயங்கொள்ளுகிற

வர்களுக்காக வைக்கப்பட்டிருக்கிறது (வெளி.3:5) இந்த மூப்பர்கள் ஜெயங்கொள்ளுகிற தேவனுடைய நீதிமான்களுக்கான பொன் முடியும் சூடியிருக்கிறார்கள். (2.தீமோ.4:7-8: யாக்.1:12; வெளி.2:10; 3:11).

இந்த மூப்பர்களில் ஒருவன், பரலோகத்திலுள்ள மீட்கப்பட்ட கூட்டத்தாருக்கு, யோவானை அறிமுகப்படுத்துகிறார்.(வெளி.7:13-17) வெளிப்படுத்தலில் உள்ள நான்கு ஜீவன்கள், எசேக்கியல் ஒன்று மற்றும் 10-ம் அதிகாரத்திலுள்ள நான்கு ஜீவன்களை ஒத்திருக்கிறது. இரண்டிலுமே எண்ணற்ற கண்கள் இருப்பதாக உள்ளது.(வெளி.4:8 எசே.1:18) வெளி.4-ல் உள்ள ஜீவன்களுக்கு அவ்வாறு சிறகுகளும் எசேக்கியேலில் உள்ளதற்கு நான்கும் உள்ளது. (எசே.1:6; வெளி.4:8). எசேக்கியலில் உள்ள ஒவ்வொரு ஜீவன்களுக்கும் நான்கு முகங்கள் இருக்கும்போது, வெளிப்படுத்தலில் உள்ள ஒவ்வொன்றிற்கும் ஒரு முகம் உள்ளது. ஆனால், இரண்டிலுமே அந்த நாலு ஜீவன்களின் முகம் ஒவ்வொன்றும் ஒன்றையே குறிக்கிறது. ஒரு சிங்கம், ஒரு எருது (காளை), ஒரு மனுஷன், ஒரு கழுகு என்று (எசே.1:10; 10:14-15,20; வெளி.4:7). சிலர் இந்த நான்கு ஜீவன்களிலிருந்தும், தேவனுடைய பல தன்மைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்று சொல்லுகின்றனர். அதாவது, சிங்கத்தின் பலமும், எருதின் சேவையும், மனிதனின் அறிவும், கழுகின் வேகமும் என்று. ஆனால், உண்மையில் இது எதற்கு அடையாளமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதென்று நமக்குத் தெரியாது. இந்த ஜீவன்களிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய பாடம் அவைகள் என்ன செய்கின்றன என்பதிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான பாடம் தானேயொழிய, அவைகள் எப்படியிருக்கிறது என்பதிலிருந்தல்ல, (அடுத்த பத்தியை கவனியுங்கள்). அதைப் போலவே எண் ஏழு என்பது முழுமைக்கும் அடையாளம் என்று தெரிந்திருந்தாலும் அதற்குப் பின்பாக, தேவனுடைய ஏழு ஆவிகள் என்னவென்றும், அல்லது அவைகள் எதை முக்கியத்துவப்படுத்துகிறதென்றும் கண்டுகொள்வது கடினமானது.

கர்த்தர் சிங்காசனத்தின் மீது வீற்றிருக்கிறார் என்ற ஏசாயாவின் தரிசனத்தில், ஆறு செட்டைகளுள்ள சேராபீன்கள், ஒருவரையொருவர் நோக்கி; சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள் (ஏசாயா.6:3).அதே பாணியில், வெளி.4:8-ல் தேவனுடைய சிங்காசனத்தின் மத்தியிலும், சுற்றிலுமிருக்கிற நான்கு ஜீவன்களும், இரவும் பகலும் ஓய்வில்லாமல், இருந்தவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று சொல்லுகின்றன. இப்படி மூன்று இடத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடியால், இது தேவனுடைய பரிசுத்த தன்மையை வலியுறுத்துவதாக உள்ளது. தேவனுடைய, கர்த்தர் என்ற அதிகாரமும், அவருடைய சர்வவல்லமையும், அவருடைய நித்திய தன்மையும் கூட அங்கே போற்றப்பட்டிருக்கிறது. தேவன் நித்தியமுள்ளவர் என்ற உண்மை இருந்தவர், இருக்கிறவர்,

வருகிறவர் என்ற கடந்தகால, நிகழ்கால, வருங்கால வார்த்தைகளைக் கொண்டு விவரிக்கப்பட்டுள்ளது. வசனங்கள் 9,10 ஆகியவை, தேவனுடைய நித்திய தன்மையை மேலும் வலியுறுத்துகிறது. அந்த நான்கு ஜீவன்களும் சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்து, சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறவருக்கு, மகிமையையும், கனத்தையும், ஸ்தோத்திரத்தையும் செலுத்தின. அந்த இருபத்து நான்கு மூப்பர்களும், சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக விழுந்து சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதார்கள். மேலும் அந்த மூப்பர்கள் தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்கு முன்பாக வைத்து, கர்த்தாவே தேவரீர், மகிமையையும், கனத்தையும், வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக் கிறவைகளும், சிருஷ்டிக்கப் பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள். அந்த ஜீவன்களின் வார்த்தைகளும், செயலும் மற்றும் மூப்பர்களின் வார்த்தைகளும், செயலும் தேவனுடைய தன்மை பற்றி நமக்குப் போதிக்கிறது. ஆகையால், நாம் அவரைத் துதித்து, கனப்படுத்தி, ஸ்தோத்தரித்து, ஆராதிக்க வேண்டும். ஏனெனில் அவர் அதற்கு பாத்திரராயிருக்கிறார். தேவனைத் தவிர நாம் வேறொன்றையும் ஆராதிக்கக் கூடாதென்று வேதாகமம் போதிக்கிறது. நாம் விக்கிரகங்களையோ *(ஏசா.44:17)* பிசாசு அல்லது சாத்தான்களையோ வணங்கக் கூடாது. *(மத்.4:9-10; 1கொரி.10:20)* நாம் மனிதர்களை வணங்கக் கூடாது *(அப்.10:25,26)* அல்லது சிருஷ்டிப்பின் எந்தவொரு பகுதியையும் எக்காரணம் கொண்டும் வணங்கக்கூடாது *(வெளி.22:8-9)*. பிதாவைமாத்திரம் நாம் ஆராதிக்க வேண்டும். *(மத்.4:9-10)*. வெளி.4:11-ன் படி நாம் தேவனை மாத்திரம் வணங்கி, ஆராதிக்க வேண்டுமென்பதற்கு காரணம் எல்லாவற்றையும் அவர் சிருஷ்டித்தவராக உள்ளார். *(வெளி.14:7 ஐயும் பார்க்கவும்)*.

இறுதியாக வெளி, 4:11 எல்லாவற்றினுடைய ஒட்டுமொத்த நோக்கத்தை வெளிப்படுத்துகிறது. எல்லாம் தேவனுடைய சந்தோஷத்திற்காக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. நீதி.16:4 கர்த்தர் சகலத்தையம் தமக்கென்று படைத்தார் என்று சொல்லுகிறது. நாம் இங்கே இருப்பதின் நோக்கமே, தேவன் விரும்புகிற. காரியங்களை நாம் செய்து, அவருக்கு மகிமையைக் கொண்டுவருவதுதான். *(யோவான் 8:28-29; எபே.3:21)*. நமக்காகவோ அல்லது வேறு நோக்கங்களுக்காகவே வாழும்படி நாம் இந்த பூமியில் வைக்கப்படாமல் தேவனுக்காக வாழும்படியாகவே வைக்கப்பட்டுள்ளோம். *(2.கொரி.5:14-15)* மாம்சத்திலே நாம் கழிக்கின்ற எஞ்சிய நாட்கள், தேவசித்தத்தை நிறைவேற்றுவதற்காகச் செலவழிக்கப்படவேண்டும். *(1. பேதுரு.4:1-2)*, தேவன் நம்முடைய சிருஷ்டிகர். ஆகையால் அவருடைய சிருஷ்டியிடமிருந்து, இப்படிப்பட்ட சேவைக்கு அவர் முற்றிலும் பாத்திரராயிருக்கிறார். தேவனுக்கேற்ற முழுமையான சேவையை நாம் ஒவ்வொருவரும் கொடுப்போமாக!

**Jon Macon** **EZSR**

# சபை தெரிந்து கொள்ளுங்கள்

## இயேசுவால், இயேசுவின் மேல் ஸ்தாபிக்கப்பட்டது.

கிறிஸ்துவின் சபை என்பது அநேக காரணங்களினால் கிறிஸ்துவின் சபை என்று அழைக்கப்படுகிறது. இப்படியொரு நாமம் (பெயர்) சபைகளில் ஒன்று என்ற ரீதியிலானதல்ல, அல்லது வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிவிலக்கான ஒரே பெயருமல்ல, கிறிஸ்து இந்த சபையை ஸ்தாபிதம் செய்திருப்பதாலும், அவரே சபையின் மூல அஸ்திபாரமாக இருப்பதாலும் அது சரியாக கிறிஸ்துவின் சபை என்று அழைக்கப்படுகிறது.

## சபையின் ஸ்தாபகர்

மத்தேயு.*16:18*-ல் சீமோன் பேதுருவினிடத்தில் கிறிஸ்து மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை, என்று சொன்னார். கிறிஸ்துவே புதிய ஏற்பாட்டுச் சபையைக் கட்டினவர் அல்லது ஸ்தாபித்தவர் என்றும், எனவே இந்த சபையைத் தமது சபை எனக் குறிப்பிடுவதையும் இவ்வசனத்தில் தெளிவாக காண்கிறோம். கிறிஸ்துவால் ஸ்தாபிதம் பெறாத எந்தச் சபையும் கிறிஸ்துவின் சபையல்ல. கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா எனும் மிகப் பெரிய உண்மையை பழைய ஏற்பாட்டில் கூறியுள்ளார் *(சங்.127:1)*. புதிய ஏற்பாட்டில் தேவனுடைய வீடே ஜீவனுள்ள தேவனுடைய சபை என்று நாம் அறிகிறோம். *(1.தீமோ.3:15)* கர்த்தர் (சபையை) வீட்டைக் கட்டாமலிருந்திருந்தால் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா. இயேசு என் பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும். என்று வெளிப்படையாக அறிவித்தார். (மத்.15:13). மனித முயற்சியில் தோற்றுவிக்கப்பட்ட எந்த ஆவிக்குரிய வீட்டாரானாலும், மார்க்கரீதியான நாற்றாக இருந்தாலும் சபையாக இருந்தாலும் அதிலே ஒருவரும் அங்கம் வகித்தல் கூடாது. கிறிஸ்து ஸ்தாபித்த சபையில் அங்கம் வைப்பதுதான் சரியானது.

## அஸ்திபாரமாகிய கிறிஸ்து:

கிறிஸ்து சபையின் ஸ்தாபகர் மட்டுமல்ல, அவர் சபையின் அஸ்திபாரமாகவும் இருக்கிறார். சீமோன் பேதுருவினிடத்தில் இயேசு முன்பு குறிப்பிட்டு, இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் (மத்.16:18) என்று கூறினார். கிறிஸ்துவின் சபை ஸ்தாபிதம் பெற்ற கல் (பாறை) எதுவாக இருந்தது, அல்லது இருக்கிறது. இயேசு ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று இப்பொழுதுதான் பேதுரு அறிக்கையிட்டிருந்தார். இந்த உண்மையின்படி இயேசு கிறிஸ்துவாகிய

அந்த கற்பாறையே அந்த அஸ்திபாரம். இந்த கல் என்பது அப்போஸ்தலனாகிய பேதுருவையோ மற்ற மனிதர்களையோ குறிக்கக்கூடியதல்ல மாறாக கிறிஸ்துவையும் அவர் தேவனிடத்தில் கொண்டுள்ள தெய்வீக உறவுமுறையையுமே குறிக்கும். அப்போஸ்தலனாகிய பவுல் இதை நிறைவான தெளிவுடன் குறிப்பிட்டு, போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது என்றார்.(1கொரி.3:11). மனிதன் மீது கட்டப்பட்ட எந்த சபையும் அல்லது மனிதனின் மார்க்க ரீதியான எந்த விசேஷக் கோட்பாடும், அல்லது ஏதோ ஒரு வகையான மனித ஆளுகை அமைப்பைக் கொண்ட சபையோ தவறான அஸ்திபாரத்தின் மீது போடப்பட்டிருப்பதால் அது நிலை நிற்காது. நமது கர்த்தர் ஸ்தாபித்த சபையோ அவர் மீது கட்டப்பட்டது. அவர் தேவனுடைய குமாரன் என்ற உண்மையாகிய அஸ்திபாரத்தின் மீது கட்டப்பட்டது. இதனால் சபையில் அங்கம் வகிக்க விரும்புகிற ஒவ்வொரு நபரும் கிறிஸ்து தேவனுடைய குமாரன் எனும் தனது விசுவாச அறிக்கையை செய்தல் அவசியம்.(அப்.8:37) சபை ஜீவனுள்ள கற்களைக் கொண்ட கட்டு அமைப்பைக் பெற்ற ஆவிக்குரிய வீடு.

ஒரு நபர் அஸ்திபாரமாகிய கிறிஸ்துவுக்குள் அங்கம் பெறுவதற்கு முன் அல்லது அந்த வீட்டிலே ஒரு கல்லாக இடம் பெறுவதற்கு முன் இயேசு தேவனுடைய குமாரன் என்று அவர் விசுவாசிக்கவேண்டும்.(1.பேதுரு. 2:5,6)

## அது எருசலேமிலே ஸ்தாபிக்கப்பட்டது

தம்மையே அஸ்திபாரமாகக் கொண்டு கிறிஸ்து ஸ்தாபித்த சபை, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளிலே எருசலேமிலே ஸ்தாபிக்கப்பட்டது.(அப்.2) வரவிருந்த மேசியாவின் இராஜ்ஜியத்தைக் குறித்து தீர்க்கதரிசிகள் முன்னுரைத் திருந்த்னர்.(ஏசாயா.2:2-4; தானி.2:44). இந்த இராஜ்ஜியம் மாம்சத்திற்கு ரியதல்ல, ஆவிக்குரியது (யோவான்.18:36). கிறிஸ்துவால் ஸ்தாபிதம் பெற்ற சபையில் இது உணரப்பட்டது.

தமது உயிர்தெழுதலுக்குப் பிறகு கிறிஸ்து தமது அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும் மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. அன்றியும் மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது என்றார். (லூக்கா 24:46-47).பின்பு அப்போஸ்தலர் 1:8-ல் மறுபடியும் பரலோகத்திற்கு ஏறிப் போவதற்கு முன்பு, அப்போஸ்தலரிடத்தில் கிறிஸ்து" பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாய்

இருப்பீர்கள்" என்றார். இங்கு குறிப்பிடப்படும் பெலனைக் குறித்து கவனியுங்கள். அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவி வரும்போது பெலனடைந்து என்று கிறிஸ்து குறிப்பிடுகிறார். (இராஜ்ஜியம் அல்லது சபையின் வருகையின் விளைவாக பூரணமான சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க பெற்றுக்கொள்ளும் பெலனைக் குறிக்கிறது) *அப்.2:1-4*-ல் பெந்தகொஸ்தே நாளிலே பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்ததையும் அவர்கள் அப்பண்டிகையில் கூடிவந்திருந்த கூட்டத்தாருக்கு அவர்களின் ஜென்மப் பாஷையில் பிரசங்கிக்கவும் ஏதுவான பெலனைப் பெற்றுக் கொண்டதையும் வாசிக்கிறோம். அப்போஸ்தலர்கள் பிரசங்கித்ததின் விளைவாக ஜனங்கள் தங்கள் இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட என்ன செய்யவேண்டும் எனக் கேட்டார்கள். (அப்.2:37) "அவர்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்று கூறப்பட்டது" (அப்.2:38) "அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள் அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்" (அப்.2:41) இப்படியாக கர்த்தருடைய இராஜ்ஜியம் அல்லது சபை பலத்தோடே வந்தது.(மாற்.9:1) எருசலேமில், கி.பி. 33-ல் கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்ற சத்தியமும் கன்மலையுமாகிய அஸ்திபாரத்தின்மேல், அவரால் அது ஸ்தாபிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ஜனங்கள் கிறிஸ்துவைக் குறித்து கேள்விப்பட்ட ஒவ்வொரு சம்பவத்திலும், அவரை விசுவாசித்து, தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு தங்கள் பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற்று சபையிலே கர்த்தரால்சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். "இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்." (அப்.2:47).

## கிறிஸ்துவின் சபையிலே இருப்பது ஒரு மிகப்பெரிய சிலாக்கியம்

தம்மையே அஸ்திபாரமாகக் கொண்டு கிறிஸ்து தாமே ஸ்தாபித்த சபையில் அங்கம் வகிப்பது ஒரு மிகப்பெரிய சிலாக்கியமாகும். அந்த சபையில் விசுவாசமுள்ள அங்கத்தினராயிருப்பதன் மூலம் ஒருவர் இவ்வுலக வாழ்வின் முடிவுக்குப்பின் பரலோகத்திலே நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளக் கூடும். மறுபுறத்தில், இயேசு தம்மையே அஸ்திபாரமாக்கி அவரால் ஸ்தாபிதம் பெறாத எந்த சபையில் அங்கம் வகித்தாலும் அது ஆபத்தானது. மனித யுக்தியினால் ஸ்தாபிதம் பெற்ற சபையில் அங்கம் வகிப்பவர்களுக்கு நித்திய ஜீவன் வாக்களிக்கப்படவில்லை. உங்கள் ஆத்துமாவிற்கு ஒரு சந்தர்ப்பத்தை நீங்கள் ஏன் எடுத்துக் கொள்ளக்கூடாது

**தமிழில்: E.A. ஆறுமுகம்**

# தீர்க்கதரிசிகள்

பரிசுத்த வேதாகமத்தில் ஆதியாகமம் முதல் எஸ்தர் வரையுள்ள நூல்கள், பழைய ஏற்பாட்டின் சரித்திரப் புத்தகங்களாகும். எபிரேய தேசத்தின் உயர்வையும், தாழ்வையும் குறித்த காரியங்களை அவை சொல்லுகிறது.

யோபுவிலிருந்து, உன்னதப்பாட்டு வரையிலான ஐந்தும் பாடல் புத்தகங்களாகும். அவை, எபிரேய தேசத்தின் பொற்காலத்திற்குச் சொந்தமானவை. இவைபோக பதினாறு தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்ட, பதினேழு தீர்க்க தரிசனப் புத்தகங்கள் உண்டு (எரேமியா, புலம்பல் இரண்டுக்கும் எரேமியா தீர்க்கன் தான் ஆசிரியர்). இவைகள், பொதுவாக, பெரிய தீர்க்கதரிசனப் புத்தகங்கள் என்றும் சிறிய தீர்க்க தரிசனப் புத்தகங்கள் என்றும் அழைக்கப்படுகிறது.

பெரிய தீர்க்க தரிசனங்கள்: ஏசாயா, எரேமியா, புலம்பல்,எசேக்கியல், தானியேல்

சிறிய தீர்க்க தரிசனங்கள் : மீகா, நாகூம், ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா, மல்கியா

புத்தகங்கள் அதன் அளவைப் பொறுத்துத் தான் பெரிய, சிறிய என்று பிரிக்கப்பட்டுள்ளது. ஏசாயா, எரேமியா, எசேக்கியல் போன்ற இந்தப் புத்தகங்கள் ஒவ்வொன்றும், மற்ற சிறிய தீர்க்கதரிசனங்கள் 12க் காட்டிலும் பெரிதான அளவில் உள்ளது. சிறிய தீர்க்கதரிசனப் புத்தகங்களில் பெரியவைகளாகிய, ஓசியா, சகரியா ஆகிய இந்த இரண்டின் அளவுக்கு தானியேல் புத்தகம் உள்ளது.

மொத்தமுள்ள பதினாறு தீர்க்கத்தரிசிகளில் 13 பேர் எபிரேய தேசத்தின் அழிவுடனும், 3 பேர் அதன் மீட்புடனும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். தேசத்தின் அழிவு இரண்டு காலகட்டங்களில் நிறைவேற்றப்பட்டது. வடக்கு இராஜ்ஜியம் கி.மு. 737-721 ல் வீழந்தது. இக்காலத்திற்கு முன்பாகவும் இக்காலகட்டத்திலும் யோவேல், யோனா, ஆமோஸ், ஓசியா, ஏசாயா,மீகா போன்றவர்கள் தீர்க்கதரிசிகளாக இருந்தனர்.

தெற்கு இராஜ்ஜியம் கி.மு. 606-586 ல் வீழ்ந்தது. இக்காலகட்டத்தில் எரேமியா, எசேக்கியல், தானியேல், ஒபதியா, நாகூம், ஆபகூக், செப்பனியா போன்றவர்கள் தீர்க்கதரிசிகளாக இருந்தனர்.

தேசத்தின் மீட்பு கி.மு. 536-444 முதல் உள்ள காலகட்டத்தில் நடந்தது.அப்பொழுது ஆகாய், சகரியா, மல்கியா போன்றவர்கள் தீர்க்கதரிசிகளாக இருந்தனர்.

*சரித்திர பின்னணி:*

சாலமோன் ராஜாவின் ஆளுகையினுடைய கடைசி நாட்களில், பத்துக்கோத்திரத்தார் வழிவிலகிப் போனதினிமித்தம், அவர்களை எச்சரிக்கும்படியாக, தீர்க்கதரிசிகளை அனுப்பும் தேவை தேவனுக்கு ஏற்பட்டது. அப்பொழுது அரசியல் ரீதியாக தேசம் பிளவுபட்டது. எகிப்தியரின் மத நம்பிக்கையின்படியான, கன்றுக்குட்டி வணக்கத்தை வடக்கு ராஜ்ஜியம் ஏற்றுக்கொண்டது. அதன்பிறகு, சீக்கிரத்தில் பாகால் வணக்கத்தையும் கூட்டிக் கொண்டது. இந்தப்பாகால் வணக்கம் தெற்கு இராஜ்ஜியத்திலும் காணப்பட்டது. ஜனங்களுடைய மனதிலிருந்து தேவனுடைய நாமம் மறைந்து போயிற்று. ஆகவே தேவனுடைய வார்த்தைகளைப் போதித்து, ஜனங்களை எச்சரிக்கும்படியாக தீர்க்கதரிசிகள் அனுப்பட்டார்கள்.

தேசத்தினுடைய பக்திக்குண்டான காரியங்களைப் போதிப்பவர்களாக முறையாக ஏற்படுத்தப்பட்ட ஆசாரியர்கள் இருந்தார்கள். இந்த ஆசாரியத்துவம் பரம்பரையாக வந்தது. ஆசாரியர்களில் அநேகர் துன்மார்க்கராக இருந்தார்கள். ஜனங்களின் பாவங்களினிமித்தம் தேவனிடத்தில் மன்றாடுவதற்குப் பதிலாக, அவர்களுடன் சேர்ந்து இவர்களும் பாவத்தில் விழுந்து, அக்கிரமத்தின் தலைவர்களாகிவிட்டனர்.

தீர்க்கதரிசன வேலை பரம்பரையானது அல்ல, ஒவ்வொரு தீர்க்க தரிசியும் தேவனிடத்திலிருந்து அழைப்பைப் பெற்றுக்கொண்டான். அவர்கள் ஒருவருக்கொருவர் வித்தியாசமானவர்கள், எரேமியாவும், எசேக்கியேலும் ஆசாரியர்கள். சகரியாவும் ஒரு ஆசாரியனே, ஏசாயா, தானியேல், செப்பனியா போன்றவர்கள் ராஜ குலத்தைச் சேர்ந்தவர்கள். ஆமோஸ் ஒரு விவசாயி, மற்றவர்கள் பற்றி நமக்கு ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆனால் அவர்கள் ஒவ்வொருவரும், சர்வவல்லமையுள்ள தேவனால், தம்முடைய வார்த்தைகளைச் சொல்லி ஜனங்களை எச்சரிக்கும்படி அழைக்கப்பட்டவர்கள்.

தீர்க்கதரிசன வேலையின் நோக்கம், விக்கிர வணக்கத்திலிருந்து தேசத்தைக் காப்பாற்றுவது, விக்கிரக வணக்கத்திலிருந்து மனந்திரும்பா தவர்கள் அழிக்கப்படுவார்கள் என்று சொல்லி ஜனங்களை எச்சரிக்க வேண்டியவர்களாயிருந்தார்கள். அத்தோடு, மீந்திருப்பவர்கள் இரட்சிக்கப் படுவார்கள் என்றும், அவர்களிலிருந்து, தாவீதின் சந்ததியைச் சேர்ந்த ஒருவர், தாவீதின் சிங்காசனத்தில் உட்கார்ந்து, என்றென்றும் அழியாத ஒரு இராஜ்ஜியத்தை ஏற்படுத்துவார் என்றும், அவர்தான் இயேசுகிறிஸ்து என்றும் வாக்குத்தத்தம் செய்ய வேண்டியவர்களாயிருந்தார்கள். கிறிஸ்துவின் வருகையும், அவருடைய சபையாகிய- இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படுதலும், எல்லா தீர்க்கதரிசிகளாலும் ஜனங்களுக்கு கொடுக்கப்பட்ட ஒரு பெரிய வாக்குத்தத்தமாகும்.

*தீர்க்கதரிசிகளின் காலம்*

***தீர்க்கதரிசிகளின் காலம் கி.மு.800-400 வரையிலான 400 ஆண்டுகால அளவைக் கொண்டது. இக்கால கட்டத்தின் மிக முக்கிய சம்பவம் எருசலேம் அழிக்கப்படுதல். இச்சம்பவத்தோடு, எரேமியா, எசேக்கியேல், தானியேல் ஒபதியா, நாகூம், செப்பனியா ஆகிய ஏழு தீர்க்கதரிசிகள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். தீர்க்கதரிசின செயல்பாட்டின் முக்கியமான ஒரு கட்டம்தான் எருசலேமின் வீழ்ச்சியாகும்.***

***எருசலேமின் வீழ்ச்சியை தேவன் தான் ஏற்படுத்தினார் என்றாலும், அதைத் தவிர்ப்பதற்கு அவர் எல்லா முயற்சியையும் செய்தார். தேவனுடைய பெயரைச் சொல்லும்படியாக எருசலேம் இருந்தது. ஆகையால், அந்தப்பட்டணத்தைக் காப்பாற்ற விரும்பி, ஒவ்வொரு தீர்க்கதரிசியாக அனுப்பினார். விக்கிர வணக்கத்தால், தேவனுடைய நாமம் முற்றிலும் அழிக்கப்பட்டுப்போயிற்று என்ற நிலை வந்தபோதுதான், பட்டணமானது அழிக்கப்பட்டு, ஜனங்கள் அடிமைத்தனத்திற்குள் கொண்டு செல்லப்பட்டார்கள். தீர்க்கதரிசிகளால், பட்டணத்தைக் காப்பாற்ற முடியவில்லை. ஆனால்,அவர்கள் தேவனுடைய ஜனங்களின் மீட்பு நடக்குமென்றும், மகிமையுள்ள ஒரு எதிர்காலம் அவர்களுக்கு இருக்கிறதென்றும் வாக்களித்தார்கள்.***

**Dehoff**

---



## உங்கள் கவனத்திற்கு

அதிகத் தரமுள்ள பல வண்ணத் தாள்களைக் கொண்டு நேர்த்தியான அளவுகளில் வடிவமைக்கப்பட்டு,சிறப்பான முறையில் அச்சிடப்பட்டு, எடுப்பான தோற்றம் கொண்ட சுவிசேஷக் கைப்பிரதிகள் ***(Gospel Tracts)*** உங்கள் உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது. **மிகக் குறைந்த விலை.** தேவைக்கு முந்துங்கள்!

## தலைப்புகள்

***1. உன்னை நீயே எண்ணிப்பார்***
***2. கண் இல்லாதவன் கண்டு கொண்டான்***
***3. மனுக்குலத்துக்கு விமோசனம் உண்டா?***
***4. இன்றைக்கு நீங்கள் மரிக்க நேர்ந்தால்...***
***5. ஞானஸ்நானம்***
***6. யார் கிறிஸ்தவன்?***
***7. ஆராதனை***
***8. சபை என்பதுஎன்ன?***

*தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்*
*தபால் பெட்டி எண் 27,*
***காங்கயம் -** 638 701. இந்தியா*
© 04257 - 20030



# HEAR THE VOICE OF TRUTH
## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 -9.00<br>9.00 - 9.15 | Box.3815<br>New Delhi -110049 | SUNNY DAVID |
| ENGLISH | Friday | 7.45 - 8.00 | Box.3815<br>New Delhi -110049 | J.C. CHOATE |
| TELUGU | Sun,Mon<br>Tue, Thu | 2.00 -2.15 . | Box . 80<br>Kakinada -533 001 | JOSHUA GOOTAM |
| TAMIL | Sunday<br>Tuesday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00<br>5.30 - 5.45<br>5.45 - 6.00<br>5.30 - 5.45 | Box . 8405<br>Bangalore - 560 084 | P.R.SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 | Sunny Meads Lane,<br>Behind Sanskrit College,<br>Trivandrum -695 034 | P.K.VARGHESE |
| KANNADA | Sunday | 1.45 - 2.00 | Box.448<br>Bangalore - 560 004 | ROBERT RATHNAKAR |

***Please write to these address for Bible Correspondence Course***

***Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

REGISTERED NEWS PAPER
RNI No. 47661 / 87 - NEW DELHI

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக்கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி.

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட ஓர் இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர்
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**
த.பெ.எண் – 27, காங்கேயம் – 638 701.

வெளியிடுவோர்
**கிறிஸ்துவின் சபையார்,**
தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701
தமிழ்நாடு, இந்தியா
✆ 04257-20030

**Published by Church of Christ, Kangayam.**
**Printed at Konar Printers, Madurai. Editor : S. RAJANAYAGAM,**